# திராவிடநாடு

0–11–58 | வார வெளியீடு | விலை 16 காசு


# அவர் மறந்தார்

(தமிழ்க்கனல்)

சொல்லமற வாதவார்த்தை ஒன்று இருக்கும்—ஆனால்
சொல்லிடம றந்தவார்த்தை வேறு இருக்கும்!—தம்மைச்
சொல்லிக்கொண்டு திரியும்பெயர் "காங்கி ரசினர்"—ஆனால்
சொல்லிக்கொள்ள மறந்தபெயர் "தீங்க ரசினர்!"—இன்று
சொல்லிடுவார் "ஆட்சிசன நாயகம்" என்று—ஆனால்
சொல்லமறந் தது"பண நாயகம்" என்று!—அவர்
சொல்லமற வார்"வந்தே மாதரம்" என்று—ஆனால்
சொல்லமறந் தார்" வந்தே மாத்துரோம்" என்று!!

"சுதந்திரம் வந்த"தென்று சொல்ல மறவார்—"வடக்கே
சொந்தமாகி விட்ட"தெனச் சொல்ல மறப்பார்!—இங்கு
"மதம்இல்லை சாதியில்லை" என்ன மறவார்—"ஓட்டுக்
கேட்கையிலே உண்டு"என்று சொல்ல மறப்பார்!—"வெள்ளையர்
நிதம்நமைச் சுரண்டினார்" என்ன மறவார்—"இன்று
நாங்கள்உமைச் சுரண்டுவோம்" என்ன மறப்பார்!—"நாட்டில்
கதர்வாரம் அனுசரிக்கச் சொல்ல மறவார்—பசியால்
கதறும்வாரம் அனுசரிக்கக் காண மறப்பார்!!

வாழ்வுயரும் ஐந்தாண்டுத் திட்டத்தா லென்பார்—அது
வடக்கினிலே மட்டுமெனச் சொல்ல மறப்பார்!—நாடு
பாழ்படுமே பிரிவினையால்! பாரதம் ஒன்றே—நீங்கள்
பேசும்திரா விடஞ்சிறிதே என்ன மறவார்—ஆனால்
ஆழ்கடல்தா லாட்டும்பெரும் பூமி தனிலே—இவர்
ஆளும்பா ரதம்சிறிதே என்ன மறப்பார்!—நம்
தாழ்ந்தநிலை நம்மவர் மறப்பதற் கில்லை!—வுவுத்
திராவிடத்தைப் பிரித்துவிடின் தீர்ந்திடும் தொல்லை!!

# வேளாண்மை

( Dr. பா. சரவணன் )

உலகில் உழவுத் தொழிலைக் கண்டறிந்த முதல்வன் தமிழன். வேளாண்மைக்குரியவர்கள் வேளாளர்கள். இவர்களுடைய சிறப்பினை ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளுக்கு:முன் தோன்றிய தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. வள்ளுவரும் "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" என உழவர்கள் உலகத்தில் பெற்றுள்ள சிறப்பினையும், அவசியத்தையும் கூறியுள்ளார். ஆனல் இன்று;

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்பதுபோல் இல்லை.

தென்னகத்தில் வாழ்ந்திடும் மக்களில் பெரும்பாலோர் 100-க்கு 80-பேர்களுக்குமேல் வேளாண்மைத் தொழில் புரிகிருர்கள். அவர்கள் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டு, வாழ்வில் வறுமையின்றி வாழ முடிவதில்லை. மக்கட் தொகுதியில் பெரும்பகுதியினரிடம் உணவுப் பற்ருக்குறையே நிலவுகிறது. உணவுப் பொருள்கள் வெளிநாடுகளிலிந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களைச் சிறுகச் சிறுகக் குறைத்திட, நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவது; நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்ற கருத்துடன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தென்னக மாநிலங்களுக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள தொகைகள்:-

### இலட்சங்கள்

| இனம் | ஆந்திரம் | சென்னை | கேரளம் | மைசூர் |
|---|---|---|---|---|
| விவசாயம், சமுதாயம்: | 2564·22 | 3535·50 | 1070·09 | 1393·51 |
| நீர்பாசனம், மின்சாரம்: | 5330·40 | 7125·00 | 2802·40 | 3791·25 |

இந்திய மாநிலத்தில் நிறைவேறியுள்ள அணைக்கட்டுத் திட்டங்கள்; மின்சார விசைத் திட்டங்கள் நிறைவேறியவைகளும் நிறைவேறிக்கொண்டு வருபவைகளும்:-

1. துங்கபத்ரா—மைசூர், ஆந்தி[illegible] ரூ. 60 கோடி
2. பக்ராநங்கல்—பஞ்சாப் 173·54 ,,
3. மச்குண்டு—ஒரிசா 36·32 ,,
4. மயூராக்ஷி—மேற்கு வங்காளம் 16·1 ,,
5. பத்ரா—மைசூர் 24·42 கோ
6. ஹிராகுத்—ஒரிஸ்ஸா 70·78 ,,
7. காச்சிரபார்ரா—பம்பாய் 11·65 ,,
8. கீழ்பவானி—சென்னை 9·51 ,,
9. தாமோதர்—தில்லையா அணை 3·66 ,,
10. கோஞர் 9·94 ,,
11. மைதான் 16 74 ,,
12. பஞ்சட்குன்று 18·25 ,,
13. துர்க்காபூர் அடைப்பு 22·86 ,,
14. பொகாரோ—பீகார்பிரதேசம் 14 64 ,,
15. ரீகாண்டீ—உத்தர் பிரதேசம் 45·26 ,,
16. சம்பல்காந்திசாகர்மத்தியபிரதேசம் 22·44 ,,
17. கோடா அமைப்பு--ராஜஸ்தானம் 25 59 ,,
18. கோய்ஞரி—பம்பாய் 42·76 ,,
19. நாகார்ஜீனசாகர்—ஆந்திரம் 88·18 ,,
20. பெரியார்—சென்னை 6·75 ,,
21. மகாநதி—ஒரிசா 14·92 ,,
22. கங்கை அணை—மேற்குவங்காளம் 25·26 ,,
23. குண்டா—சென்னை 35 44 ,,
24. சராவதி—மைசூர் 22 97 ,,
25. கடாஞு—பம்பாய் 14·07 ,,
26. கோர்பா—மத்தியபிரதேசம் 12 34 ,,
27. கோசி—பீகார் பிரதேசம் 44 6 ,,
28. தாவா—மத்தியப் பிரதேசம் 18·34 ,,
29. யமுஞ—உத்தரப் பிரதேசம் 19·59 ,,

"உழவின் மிகுந்த ஊதியம் இல்லை" என்ப தமிழகத்தின் பழமொழி. தமிழகத்தில் வாழு மக்கள் பெரும்பாலோர் கிராமங்களில் வாழ்பவர்கள் அவர்கள் ஈடுபடும் தொழிலும் உழவு. நாட்டி பெரும்பாலோர் விவசாயததிஞலேயே பிழைக்கின் றனர். விவசாயத்திற்கு நிலவளம் இன்றியமைய தது. நிலவளம் மட்டுமல்ல, நீர்வளமும் அவசிய "நீர் உயர்ந்தால் நெல் உயரும்" எனவே மக்களுக் உழவுத்தொழிலுக்கு அவசியமான நீர் கிடைத்தி நீர்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டு

பிறமொழி மாநிலங்களிலிருந்து நீர் கொண்டுவ சென்னை அரசியலார் திட்டம் வகுத்தனர். ஆயினு இன்றளவும் முடிவு காணுத பிரச்சினையாக உள்ள மக்கள் வாழ்வுப் பிரச்னை! என்ருலும் முடிவுகாண முடியவில்லை. உலகப் பிரச்னைக்கு ஓடோடியு சென்று யோசனை கூறிடும் நேரு அவர்கள் இதி முடிவுகாண முன்வரவில்லை.

எத்துணை கிராமங்களில் நீர் கிடைத்திடாம நிலங்கள் பயிர் செய்யாமல் விடப்படுகிறத

(4-ம் பக்கம் பார்க்க)

# என்றைக்காவது ஒரு நாள்

17] ஆண்டு சந்தா ரூ. 8 [30-11-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 20

டில்லி சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும் எந்தத் திட்டமும் சரியான முறையில் உருவாவதில்லை—உருவாக்கப்படுவதில்லை என்று நாம் பல காலமாகவே கூறிவருகிறோம். முன்பின் யோசனையின்றித் திட்டங்களைத் தீட்டுவதும் அவை தம்மால் எல்லாம் ஊழல்கள் மலிந்து காணப்படுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டன. இவற்றை நாம் எடுத்துக்காட்டிப் புள்ளி விபரங்களை முன்வைத்துக் கூறும்போதெல்லாம் அகில இந்தியம் பேசித் தேசியம் வளர்ப்போர் நம்மீது சீறிவிழுவதன் வாயிலாகத் தாங்கள் வெற்றிகண்டுவிட்டதாக எண்ணி நிமிர்ந்து நின்று பேச முன்வந்து விடுகிறார்கள்.

யார் ஏக இந்தியம் பேசித் தேசியம் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்களோ, அவர்கள் முகாமிலிருந்தே நாம் கூறும் ஆதாரங்களுக்கு ஆதரவு கிடைக்கின்ற நிலை இப்போது உண்டாகியிருக்கிறது. புண்ணைப் புனுகால் மறைக்க முயல்வதைப்போல் உண்மையை எவ்வளவு காலத்துக்குத்தான் மறைத்துவைக்கமுடியும்?

டில்லி சர்க்காரால் நடத்தப்படும் உருக்குத் தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ள ஊழல்கள் பற்றியும் ஊதாரிச் செலவுகள் பற்றியும் அண்மையில் டில்லிப் பாராளுமன்றத்தில் பேசப்பட்டது நினைவிருக்கலாம்.

1. "தொழிற்சாலைகள் பற்றியவரை, செலவு அதிகரிப்புக்கு, பெருவாரியான தொகை சரியான முறையில் செலவழிக்கப்படாதது முக்கிய காரணம்".
2. "நிபுணர்கள் என்ற பெயரில் தேவைக்கு அதிகமான பேர்வழிகளை அமர்த்துவது."
3. "தொழில் நுணுக்கம் தெரியாதவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது."
4. "அற்ப காரியங்களுக்கெல்லாம் அதிகாரிகள் வீணாகத் தாமதம்செய்து இழுக்கடிப்பது."
5. "வேலைக்கு இலாயக்கற்ற காண்ட்ராக்டர்களிடம் வேலையை ஒப்படைப்பது."

ஆகிய இவ்வினங்களில் பெருந்தொகை விரயமாகி வந்திருக்கிறது என்ற இக்குற்றச்சாட்டுகள் நம்மால்—தேசியம் தெரியாதவர்கள் என்று கருதப்படும் நம்மால் கூறப்படுவன அல்ல. அசல் தேசியம் பேசும் கூடாரத்திலிருந்து கிளம்பும் குமுறல்கள் தாம் மேலே குறிப்பிட்டிருப்பவை.

தேசியத்தை வளர்க்கப் பாடுபடும் ஏடுகளில் ஒன்றான "சுதேசமித்திரன்" "ஊழலும் விரயமும்" என்ற தலைப்பிட்டு எழுதியிருக்கும் தலையங்கத்தின் ஒரு பகுதியே இது:

> "சர்க்கார் உருக்குத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் விஷயத்தில் காணும் ஊழல்களைப் பற்றி லோக் சபையில் மிகக் காரமான விவாதம் நடந்திருக்கிறது............இத் தொழிற்சாலைகள் விஷயத்தில் தக்க முன்னோக்குடன், தெளிவான விவரங்களுடன் சர்க்கார் திட்டமிடவில்லை. நமது எதிர்காலத் தொழில் வளர்ச்சி முக்கியமாக இவ்வுருக்குத் தொழிற்சாலைகள் கூடியவரை துரிதமாக உருப்பெறுவதையே பொறுத்திருக்கிறது. எனினும் அதற்கேற்ற ஒரு பொறுப்பு உணர்ச்சி இவை சம்பந்தமான அதிகாரிகளின் நடவடிக்கைகளில் காணவில்லை. முதலில் திட்டம் அமைத்ததிலிருந்து, செலவு மதிப்பீடுகளை மீண்டும், மீண்டும் உயர்த்திக்கொண்டு வந்திருக்கின்றனர். இதுவரையில் மட்டும் அசல் செலவு மதிப்பீடு 45-சதவிகிதம் உயர்ந்துவிட்டதென்பதை ஒரு அங்கத்தினர் எடுத்துக் காட்டியுள்ளார். அத்தகைய மதிப்பீடு எதிர்பாராத விலைவாசி உயர்வால் அதிகரிப்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும். ஆனால் இத்தொழிற்சாலைகள் பற்றியவரை செலவு அதிகரிப்புக்கு பெருவாரியான தொகை சரியான முறையில் செலவழிக்கப்படாதது ஒரு முக்கிய காரணமாகும். நிபுணர்கள் என்ற பெயரில் தேவைக்கதிகமான பேர்வழிகளை அமர்த்துவது, தொழில் நுணுக்கம் தெரியாதவர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது, வேலைக்கு இலாயக்கற்ற காண்டிராக்டர்களிடம் வேலையை ஒப்படைப்பது, அற்ப காரியங்களுக்கெல்லாம் அதிகாரிகள் வீணாகத் தாமதம் செய்து இழுக்கடிப்பது முதலிய இனங்களில் பெருந்தொகை விரயமாகி வந்திருக்கிறது. ஜெர்மனியிலிருந்து தச்சு வேலை செய்வதற்காக வரவழைக்கப்பட்ட 32-பேருக்குத் தலைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 5,000 சம்பளமாம். குறைந்த சம்பளத்திற்கு வர மறுத்தால் அவர்களில் ஒரு சிலரை மட்டும் வர

(14-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

பாலாற்றில் தண்ணீர் கொண்டுவரும் பிரச்னை? கேள்விக் குறியுடன்தான் அமைந்துள்ளது. பல நூறு மைல்கள் கால்வாய் வெட்டப்பட்டு நீர் கொண்டுவரப்படுகிறது வடநாட்டில்.

சட்லெஜ் என்ற நதி பஞ்சாப் மாநிலத்தில் ஓடுவது; அந்நதியில் தடைபோடப்பட்டு, தேங்கி இருக்கும் நீரைத் திருப்பி 425 மைல் தூரம் கால்வாய் வழியாகக் கொண்டுசெல்லப்பட்டு ராஜபுதனத்துக்குரிய நீர்ப்பாசனம் செய்யப்பட்டுள்ளது. உலகிலேயே இந்தத் திட்டம், தனிப்பட்ட கால்வாய் என்பதில் மிகப் பெரியதாக விளங்குகிறது. 66½ கோடி ரூபாய் செலவில்; "ராஜபுதனப் பாலைவனம்" என சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டது, இன்று சோலைவனமாக காட்சி தருகிறது. வருங்கால வரலாற்றில் இடம் பெறுகிறது. "பாலைவனத்தைச் சோலைவனமாக்கிய செயலைப் பாரீர்" என்ற புகழுரை அரசியலாருக்கும் கிடைக்கும்.

ஆனால்? தமிழகத்தில் பாலாற்றில் தண்ணீர் ஓடவில்லை. "இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் விவசாயத்திற்கு ஒதுக்கிய தொகை முழுதும் பயன்படுத்த இயலாததால் மற்றத் துறைகளுக்குப் பயன்படுத்தப்படும்" என்று அறிவிக்கிறார் நிதியமைச்சர் சுப்பிரமணியம்.

பெப்சு மாநிலத்தில் நூற்றுக்கணக்கான மைல்கள் முட்புதர்களாக இருந்த காடு மேடு பள்ளங்களை சமமாக்கி; சோளமும், கரும்பும், நெல்லும், கோதுமையும் பலவகையான தானியங்களும் பயிர் செய்திடும் முயற்சி. புதிய கால்வாய்கள் வெட்டப்பட்டு நீர் கொண்டுவரும் திட்டங்களை உருவாக்கி செயலாற்றிடும் அமைச்சர்கள் அங்கே! காந்தி பிறந்தவராக் கொண்டாட்டம், பாதை யாத்திரை செய்து, கதர் விற்பனை செய்திடும் அமைச்சர்கள் இங்கே!

மக்கள் வாழ்வில் வளம் காண ஏதாவது செய்ய வேண்டும்; அவர்களின் பொருளாதார உயர்வுகாண வேண்டும் என்பன போன்ற சிறந்த தேவைகளைச் செயலாற்ற விரும்பும் அரசு, அவ்விருப்பங்களை நிறைவேற்றத்துணைபுரியும் வேளாண்மையைச்சிறப்புறச் செய்யவேண்டும். அதன் வளர்ச்சிக்குரிய திட்டங்களை வகுத்துச் செயலாற்றவேண்டும்.

உழவுத் தொழிலுக்கு உயிர்நாடி என விளங்கும் நீர்ப்பாசனம் எளிதாக எக்காலத்திலும் கிடைத்திட வழிவகைகள் செய்தல் அவசியம். "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்பது பழமொழி. எனவே அரசு சீருடன் விளங்கவேண்டுமானால் ஏரைத்தேடிச் செல்லவேண்டும். ஏர் உழுதிட அவசியம் தேவைப்படும் நீரைப் பிற மாநிலங்களிலிருந்து கொண்டுவரும் பிரச்னைகளில் முடிவுகண்டு விரைவில் நிறைவேற்ற வேண்டும்.

இந்திய மாநிலத்தில் நிறைவேற்றிவரும் திட்டங்களையும், புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பவைகளையும் கண்டால் தென்னாடு, குறிப்பாகத் தமிழகம் எவ்வளவு திட்டங்களில் புறக்கணிக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டும். நூறு கோடிகளுக்கு மேல் செல்லும் திட்டங்கள் அனைத்தும் வடநாட்டில் தான் நிறைவேற்றப்படுகிறது எனபதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

## புதிய திட்டங்கள்

| திட்டங்களின் பெயர் | மாநிலம் | மொத்த செலவு | 2வது திட்ட ஒதுக்கிய தொகை |
|---|---|---|---|
| ஊகை | பம்பாய் | 60கோ | 6·50 |
| நர்மதா | ,, | 25 ,, | 4·00 |
| பனுஸ் | ,, | 7·37 | 3·00 |
| மூலா | ,, | 8·39 | 3·50 |
| கீரானு | ,, | 8·08 | 5·50 |
| காதக்வன்லா | ,, | 11·82 | 4·00 |
| தாவா | மத்திய பிரதேசம் | 18·39 | 7·11 |
| சந்திரசேகர் | மத்திய பாரத் | 75 | 75 |
| பூர்னு | ஐதராபாத் | 7·73 | 5·00 |
| வாமசாதரா | ஆந்திரா | 12·56 | 1·00 |
| புதுக்கட்டளை | சென்னை | 1·49 | 1·48 |
| விதுரா | ,, பாண்டிச்சேரி | 61 | 61 |
| சாவண்டி | ஒரிஸ்ஸா | 4·45 | 4·25 |
| காபினி | மைசூர் | 2·50 | 2·50 |
| குர்கான் கால்வாய் | பஞ்சாப் | 2·30 | 1·54 |
| கங்க்சபதி | மேற்கு வங்கம் | 25·14 | 5·00 |
| பானுன் | ராஜஸ்தானம் | 4·80 | 2·80 |
| பாதர் | சௌராஷ்டிரம் | 4·00 | 1·06 |
| பூதாதன்கட்டு | கேரளம் | 3·48 | 3·48 |
| லிட்டர் கால்வாய் | ஜம்மு காஷ்மீர் | 75 | 58 |
| பார்னு அல்லது கோபால் | பூபால் | 4·00/ 5·00 | 2·30 |
| லட்சுமனதீர்த்தா | கூர்க் | 25 | 25 |
| கசாயரி | விந்திய பிரதேசம் | 1·60 | 25 |

## நிறைவேறிவரும் திட்டங்கள்

| திட்டங்களின் பெயர் | மாநிலம் | மொத்த செலவுத் தொகை | 2வது திட்ட ஒதுக்கிய தொகை |
|---|---|---|---|
| பக்ராநங்கல் | பஞ்சாப்,பெப்சு, ராஜ. | 160கோ | 28·83 |
| தாமோதர் | மேற்கு வங்கம் பீகார் | 86 ,, | 9·93 |
| மயூராக்ஷி | மேற்கு வங்கம் | 16·11 | 2·12 |
| ஹீராகுட் | ஒரிசா | 85·70 | 21·94 |
| சாம்பல் | மத்திய பாரத் | 48·03 | 21·05 |
| துங்கபத்ரா | ஐதராபாத், ஆந்திரம் | 60 | 5·50 |
| பத்ரா | மைசூர் | 17·75 | 11·02 |
| கோசி | பீகார் | 45·95 | 17·00 |
| நாகா அர்ஜீனசாகர் | ஆந்திரம், ஐதராபாத் | 75·08 | 34·00 |
| துங்கபத்ரா கால்வாய் | ,, மைசூர் | 18·96 | 6·20 |
| கக்ராபர் | பம்பாய் | 11·01 | 3·86 |

புதிய திட்டங்கள் செயலாற்றப்படுவதில் முதலிடம் பெறுவது பம்பாய் மாநிலம். திட்டங்கள் நிறைவேற 120 கோடிகளுக்கு மேலாகச் செலவுத் தொகைகள். பலத்துறைகளிலும் முன்னணியிலுள்ள பம்பாய் மாநிலம் வருங்காலத்தில் வேளாண்மையிலும் முதன்மை பெற்று விளங்கும். வேளாண்மைத் தொழில் துறையை முதலில் கண்டறிந்த தமிழகம் பம்பாய் நிலைக்கு என்றுதான் வருமோ? என்ற வினாதான் எழுகிறது!

# ★ பத்தாண்டுகளுக்குப் பிறகு! ★

ஜனகணமன கீதம் கேட்கிறது—வந்தேமாதரம், ஜேஇந்த் முழக்கம் ஒலிக்கிறது — தாயின் மணிக்கொடியைப் பார்க்க அழைக்கிறார்கள் — அதிகார மாற்றம் நடந்து அரசியல் தர்பாரில் தலைவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் — அமெரிக்காவும் பிரான்சும் கை குலுக்குகிறது. எல்லாம் சரி! எனினும், இத்தனை அமளிகளுக்கிடையே, மஞ்சள் ஏகாதிபத்தியம், மெள்ள மெள்ளக்கொலுவில் அமருகிறது; கூர்ந்து நோக்குவீர் பெரியீர், என்று அறைகூவல் விடுத்தோம்!

அல்லாடியும், டி. டி. கே.யும், அவர்கூடச் சென்ற காங்கிரஸ் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களும், மாளிகை வாசத்தையும் அதைவிடப் போதை தந்த அதிகார பானத்தையும் அருந்திக் களித்துக்கொண்டு, "ஆகா! ஊகூ!" என்று தலையாட்டிக் கொண்டிருந்த நேரம். நாம் தவித்தோம்! தாசர்களாக்கப்படுகிறோம் என்றுரைத்தோம்! குரலொலிப் போரில்லையே, அந்தக் கொலு மண்டபத்தில் — வெள்ளையனிடமிருந்து அதிகாரம் பெற்ற காங்கிரசின் எசமானர்கள் இந்தப் பரந்த உபகண்டத்தில் இன்னொரு 'பாதுஷா தர்பார்' உண்டாக்க முயல்கிறார்களே! அக்பர் முயன்று பார்த்து முடியாததை, அவுரங்கசீப்பால் சாதிக்க இயலாததை, வெள்ளையன் உண்டாக்கியதை, காங்கிரஸ் கட்சியின் பெயரால் தங்கள் வசம் "மாற்றி"க்கொள்கிறார்களே என்று குமுறினோம்.

முன்பு, இலண்டன்! இப்போது டில்லி!!

முன்பு இந்தியா மந்திரி தேம்ஸ் நதிக்கரையிலிருந்தார்! இப்போது டில்லிப்பட்டணத்தில் இருக்கிறார்! முன்பிருந்த கவர்னர், வெள்ளையனின் எடுபிடி! இப்போது கவர்னருண்டு—இவருடைய எசமான் வெள்ளையன் இல்லையே ஒழிய, அவன் விட்டுப்போன பீடத்தில் இருப்பவர்கள்தாம்!—கவனித்தீரோ என்று கவலையோடு கேட்டோம்.

நம் உரைகளைக் கேட்டோர், 'உண்மைதானே' என்றனர்—ஏடுகளில் படித்தோர், 'ஆமாம், ஐயா!' என்றனர் — ஆனால் இதைச் சொல்ல நாம் அரசியல் நிர்ணய சபையில் இல்லை! அப்போது, திராவிட முன்னேற்றக் கழகமும் இல்லை! அதனால் காங்கிரஸ் எசமானர்கள் தமது விருப்பப்படி அரசியலை அமைத்துக் கொண்டனர். இந்திய உபகண்டத்தில் இன்னொரு 'சாம்ராஜ்யம்' உருவாக்கத் திட்டம் போட்டனர்.

"இதென்ன அரசியல் திட்டம்? மாகாணங்களுக்கு உரிமையில்லையே! எல்லாவற்றையும் மத்திய சர்க்காரே சுரண்டிவைத்துக் கொள்கிறதே!" என்று உலகப் புகழ்பெற்ற ஐவார் ஜென்னிங்ஸ் போன்ற அறிஞர்கள் கூறலாயினர், அங்குமிங்குமாயிருந்த பெரியவர்கள் பலரும், முணுமுணுத்தனர். எவர் குரலும், டில்லிக்கு எட்டுவதாகவுமில்லை! இங்கிருந்துபோன காங்கிரஸ் தலைவர்கள் போட்ட 'ஜே' முழக்கத்தில் நியாயக்குரல் அமுங்கி விட்டது!

அதன் பிறகு சந்தர்ப்பம் வரும் போது, அமைச்சர்கள் மட்டுமல்ல, அறிஞர்கள் பலரும், நாம் அன்று சொன்னதை எடுத்துச்சொல்லத் தவறவில்லை.

**மாகாண சர்க்கார்கள் சாதாரண பஞ்சாயத்துக்களாகிவிட்டன.**

**எதற்கெடுத்தாலும் இங்குள்ள மந்திரிகள் காவடி தூக்குகிறார்கள்!**

**ஓடிப்போய் அடிக்கடி ஆலோசனை பெற்றுவர ஒரு தனி விமானமே வாங்கினார்கள்.**

**எந்த ஒருமுடிவு செய்வதாயினும் சரி மேலிடம் சம்மதிக்க வேண்டும்.**

**இது தேவையா!!**

சுதந்திர சர்க்காரின் 'சதி' கொஞ்சம் கொஞ்சம் துலங்க ஆரம்பித்ததும், பேச்சுகள் கிளம்பலாயின. உறவுக்கு இமயம் எனும் ம. பொ. சி. முதல், இப்படி ஒரு எண்ணத்தை வெளியிடுவதே பஞ்சமாபாதகத்தில் ஒன்றுஎன்று கருதிய ஏடுகள் வரை, இந்தக் கருத்தை எதிரொலிக்கலாயின.

சென்னை மாநிலத்தின் ஆள்வோராக வந்த பிரகாசம் — ஓமந்தூரார்—குமாரசாமிராஜா— ஏன்? கடைசியில் ஆச்சாரியார்கூட இந்த அதிருப்திக் குரலைக் கிளப்பத் தவறவில்லை.

ஓமந்தூரார் காலத்தில், மேலிடத்துப் பிடியில் பட்டபாடு நாடு அறியும்! ஒளித்துவைத்துப் பேசும் அவசியமும், அந்தக் குணமும் அமையாததால், மாகாணங்களின் உரிமைகளையெல்லாம் மத்யசர்க்கார் பறித்துக்கொண்டிருக்கிறது என்று வெளிப்படையாகவே பேசலானார் அவர்! சான்றுகளைக்கூடச் சொன்னார்—பழைய ஏடுகள் சொல்லும் அவைகளை!!

ஆண்டுகள் ஓட ஓட, இது போன்ற பேச்சுகள் அதிகமாயின. தமிழ்நாடு மட்டுமல்ல, பிற பகுதிகளும்கூட, டில்லியின்மீது இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தலாயின.

எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, ஆளும் கட்சியைச் சேர்ந்த அன்பர் அழகேசன் போன்றார்

கூட (அவர் மந்திரியாக வரும் வரையில்) பார்லிமெண்டில், பேசினர் இதுபோல! பல அரசியல் மேதைகளும், வெளிப்படையாகச் சொல்லலாயினர்!!

'பெடரல் சர்க்கார்'!

'இது பெடரல் சர்க்காரா? அப்படி என்றால், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தரப்பட்டிருக்க வேண்டுமே!'

'ஓகோ, அப்படியா? இது பெடரல் சர்க்காரல்ல — யூனியன் சர்க்கார்'

இப்படிக்கேள்வியும் பதில்களும் கிளம்பலாயின.

கூட்டாட்சி — ஏக ஆட்சி, அது, இந்திய உபகண்டத்தில் நடப்பது என்று, வாதப் பிரதிவாதங்கள் கிளம்பலாயின. இரண்டும் கலந்தது போலத் தோன்றும் ஒரு ஏகாதிபத்திய ஆட்சி, என்றாராம். சொன்னால் மட்டும், அவர்களால் எளிதில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"எதாயிருந்தால் என்ன! நம்ம நேரு இருக்கிறார்—நம்ம ராஜாஜி உண்டன்றோ! — தேசமே, நம்மதுதான். இதிலென்ன பேதா பேதம் வேண்டிக்கிடக்கு. தள்ளுங்கோன்ன."

"வருமான வரியில் பங்கு தர்ரா நூத்துக்குப் பதினெட்டுத்தான் என்றாலும் தர்ராளா, இல்லையோ! இவா கேட்டா, அவா, உதவி ஒத்தாசை செய்யறாளோ, இல்லீயோ! அது போதாதோ — அதைவிட, என்ன வேணுமாம்..."

"கேட்டீராய்யா, ஓய்! அண்ணாதுரை சொல்றதை — நிலவரியையும் விற்பனைவரியையும் தவிர்த்து மிச்ச எல்லா வரிகளையும், இன்கம்டாக்ஸ் கஸ்டம்ஸ் வியாபாரம் எல்லாத்தையும் டில்லிக்காரா கொண்டுபோயிடுறான்களாம். இங்கேயிருந்து வருடா வருடம் கோடிக் கணக்கில், டில்லிக்காரா கொட்டிண்டு போறான்னு பேசுறாய்யா..."

இப்படி, விமர்சனங்களும், கேலி உருவத்தில் விளக்கப் பேச்சுகளும் நடக்கலாயின.

"என்ன இருந்தாலும், பாருங்கோ! வரிகளை வாங்கிப் போனாத்தான், என்ன? நமக்கு ஒரு கஷ்டம்னா உதவாமப் போவாங்களோ! அஞ்சாண்டுத் திட்டம் போட்டுக் காரியம் செய்யப் போறாங்க. என்னென்ன நமக்கு கிடைக்கப்போவுதுன்னு பாருங்களேன். அப்பத் தெரியும், நேத்து முளைச்ச தி. மு. க. பேச்சிலேயிருக்கிற பித்தலாட்டம் எவ்வளவுங்கிறது!!"

இவ்வாறு, காங்கிரஸ் நண்பர்கள், கர்ச்சித்தார்கள். காலம் ஓடிற்று — கர்ச்சனை எழுப்பிய குரல்கள் கம்மலாயின-ஆமாய்யா! அங்கே, தாமோதரும்—பக்ராநங்கலும்—சித்தரஞ்சனும் —ஹீராகுட்டாம்—சந்திகாராம்-சாம்பல் நதித்திட்டமாம்-நூறுகோடி இருநூறு கோடி என்கிறார்கள். இங்கே, அப்படியொன்றும் இல்லையே!!— என்கிற குமுறல், ஒவ்வொரு இடத்திலும் கேட்கலாயிற்று.

இந்த மந்திரிகளைக் கேட்டால், "டில்லி, அதோ!", என்கிறார்கள்.

எதற்கும், 'டில்லி! டில்லி!!' என்று, இன்னும் சொல்கிறார்கள்.

மக்கள் மன்றத்திலும், இப்போது உண்மை பளிச்சிட ஆரம்பித்துள்ளது.

இதுபோது, எங்கெங்கிருந்தெல்லாமோ, டில்லியின் ஆதிக்கம் பற்றிய குரல்கள் ஒலிக்கின்றன.

"பல்தரப்பட்ட பழக்க வழக்கங்களும், குணங்களும்கொண்ட ஒரு பெரிய நாட்டில், எல்லா அதிகாரங்களையும் தன் தலையில் போட்டுக்கொண்டு, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இடத்திலும், என்ன நடக்கிறதென்று கட்டுப்படுத்துவதென்பது, சாத்யமல்ல என்பது மட்டுமல்ல, கூடவும் கூடாது. ஒவ்வொரு பகுதியும் தன் விருப்பப்படி பார்த்துக்கொள்ள விட்டுவிடவேண்டும்."

"மாகாண உரிமைகளைச் சாகடிக்கும் வகையிலேயே, இன்றுள்ள அரசியலமைப்பு இருக்கிறது; இயங்கி வருகிறது. இதற்குக்காரணம், என்னசெய்யவேண்டுமென்பது, மத்திய பீடத்திலேயே முடிவு செய்யப்படுகிறது. அரசியல் எண்ணங்களும், கொள்கைகளும் ஒரே இடத்திலேயே உட்கார்ந்து நிர்ணயிக்கப்படுவதால், நாட்டின் ஒவ்வொரு பாகத்திலும் உற்சாகமும் வேகமும் உண்டாக வழியில்லை."

"சின்னஞ்சிறு விஷயத்தில் கூட தன்னிச்சைப்படி எதையாவது செய்ய லாம் என்றால் வழியில்லை. எல்லாம் இந்திய சர்க்காரின் பொறுப்புத்தான் அரசியல் சட்டத்தில், இந்த இடம் சரி யில்லை. சிலபேர் சொல்வார்கள், அதி காரம் ஒரே இடத்திலிருக்கவேண்டும் என்று. இப்போதே பார்க்கிறோம், தங்க ளால் ஏதாவது காரியம் செய்யமுடிய வில்லை என்றால், மாகாண மந்திரிகள் மத்திய சர்க்கார் மீது பழி போட்டுவிடு கிறார்கள்; மத்திய சர்க்கார், 'நாங்க ளென்ன செய்வோம். அது மாகாணத் தின் கடமை' என்று பதில் அளித்து விடுகிறது. இதனால், மாகாண மந்திரி களுக்கு பொறுப்பின்மை அதிகரித்து வருகிறது."

"மத்திய பீடத்திலும், மாகாணங்களி லும் ஒரு கட்சியே உட்கார்த்து கொண்டி ருக்கிறது. சரியான கட்சிகள் இல்லை, இதனால், அரசில், ஏகபோக மிராசே வளரும். காலப்போக்கில், இது, ஜன நாயகத்துக்கு உலைவைக்கும். அதோடு, தேசீய எண்ணம் மங்கிவரும் அறிகுறியும் ஆங்காங்கு தெரிகிறது. மொழி, வட்டார உணர்ச்சிகள் தலைதூக்கிவருகின்றன"

**"இன்னும் பத்தாண்டு களுக்கு இன்றுள்ள அரசிய லமைப்பு நீடிக்க வேண்டும் (?) அதன் பிறகுதான், இந்தி யாவின் எதிர்காலத்தைப்பற் றிக் கவனிக்கவேண்டும்."**

வழக்கறிஞர்—காந்தியடிகள் குரல்கேட்டுத்தியாகத்தீயில்குதித் தவர்—அலிகார் பல்கலைக் கழகத் தில் பேராசிரியராக இருந்தவர்— திருச்செங்கோட்டில் ஆச்சாரியார் நிறுவிய காந்தி ஆசிரமத்தின் காரண கர்த்தாக்களில் ஒருவர்— 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆசிரிய ராகஇருந்தவர் — எழுத்தாளர்— மத்திய சட்டசபையில் உறுப்பின ராயிருந்தவர் — சுயராஜ்ய சர்க் காரின் டில்லி மந்திரியாகவுமிருந் தவர் — பிறகு லெப்டினன்ட் கவர்னராகப் பதவி வகித்தவர்— அண்மையில் டில்லி நியமித்த மாநில நிதிக் கமிஷனின் தலைவ ராகவுமிருந்தவரான கே. சந்தானம் அவர்கள்தான், மேற்கண்டவாறு பேசியிருக்கிறார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# வில்லியம் காக்ஸ்டன்

**கி. சோழன்**

ஒருமணி நேரத்தில் பல்லாயிரக் கணக்கான பிரதிகளை அச்சிடக் கூடிய மாபெரும் அச்சு இயந்திரங்கள் மலிந்துள்ள இந்த இருபதாம் நூற்றாண்டில், அச்சுப்பொறியின் அருமை பெருமைகள் பற்றியோ, அது முதலில் கண்டுபிடித்த பெருமேதைகள் அதற்காகப் பட்ட துன்பங்கள் பற்றியோ சாதாரண மக்களில் பெரும்பாலோர் அறிந்து கொள்ளாமலேயே இருக்கிறார்கள்! ஆனாலும் அந்த அச்சு இயந்திரம் மனித சமுதாயத்திற்குச் செய்து வருகின்ற தொண்டு மகத்தானதாகும்! மாபெரும் இலக்கியங்கள் பலவும் கையெழுத்துப் பிரதிகளாக--மேட்டுக் குடியினர் மட்டுமே ஏராளமான பொருள் கொடுத்து வாங்கிப்படிக்கும் நிலையில் இருந்தது! அந்த நிலையை மாற்றி ஏழை எளியவர்களும் அத்தகைய இலக்கியங்களை வாங்கிப் படித்துப் பயன்பெறும் வண்ணம் செய்த பெருமை அச்சுப் பொறியையே சாரும்! அந்தப் பெரும்பணியிலே ஈடுபட்ட பெருமேதைகள் இருவர்! ஆங்கில நாட்டில் அந்தப் பெரும் பணியை வெற்றிகரமாக நடத்தி அழியாப் புகழைத் தேடிக்கொண்டவர் "வில்லியம் காக்ஸ்டன்" என்ற பெருமேதையாவர்!

இங்கிலாந்து நாட்டில் "கென்ட்று" என்ற மாவட்டத்தில் அவர் பிறந்தார். இன்று வண்ண ஓவியங்கள் பலவும் நம் கண்ணைப் பறிக்கும் வண்ணம் அச்சிட்டுத் தருகிறார்களே, அதைத் தோற்றுவித்த அந்த பெருமேதை பிறந்தது நாகரிகமே பரவாத ஒரு சிறு கிராமம்! அவர் எங்கே கல்விகற்றார்? எவ்வளவு கல்விகற்றார்? என்பதைப்பற்றிச் சரியான வரலாறு கிடையாது! ஆனால் அவர் ஓரளவு கல்வி பயின்றிருந்தார் என்பது மாத்திரம் அவர் மொழிபெயர்த்த தனது முதல் நூலில் "என்னைப் பெற்றுவளர்த்துக்கல்வியறிவைப் போதித்துத்தந்த எனது அன்பான பெற்றோர்களுக்கு என் அன்பு வணக்கங்கள்" என்று தனது முன்னுரையில் கூறுகிறார்!

அவர் தமது பதினைந்தாவது வயதில் இலண்டன் மாநகருக்குச் சென்று அங்கே பெருவணிகராயிருந்த "வில்லியம் லார்ஜ்" என்பவரிடம் வேலைக்கமர்ந்தார். அந்த வணிக நிலையத்தில் பல்வேறு பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன! அவற்றில் பல விலையுயர்ந்த கையெழுத்து நூல்களும் இருந்தன! காக்ஸ்டன் தன்னுடைய ஓய்வு நேரத்தில் அந்த நூல்களைப் படிப்பார் — சுமார் ஏழு ஆண்டுகள் அந்த வணிகரிடத்திலே காக்ஸ்டன் தொழில் செய்தார். பிறகு அந்த வணிக நிலையத்தைவிட்டு விலகிக் கொண்டார். பிறகு ஏழு ஆண்டுகள் அவர் என்ன செய்தார் என்பது யாருக்கும் தெரியவில்லை!

1441-ம் ஆண்டு வில்லியம் லார்ஜ் என்ற அந்த வணிகர் காலமானார். அவருக்கிருந்த சொத்தில் ஒரு சிறு பகுதியை அவர் காக்ஸ்டனுக்காக எழுதிவைத்திருந்தார்.

1442-ம் ஆண்டு காக்ஸ்டன் இங்கிலாந்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டு ஆலந்து, பெல்ஜியம், முதலிய நாடுகளுக்குச் சென்றார். அங்கே அவர் பல்வேறு வியாபார முறைகளில் ஈடுபட்டார். அத்தோடு பிரஞ்சு மொழியைக் கற்றுக்கொள்ளவும் செய்தார். பிரஞ்சு மொழியிலுள்ள பல இலக்கியங்களை அந்தக் காலத்தில் அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்! அங்கே இருந்த ஒரு சிற்றரசின் கீழ் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார்!

ஓயாமல் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருப்பது காக்ஸ்டனுக்கு வெறுப்பைத் தந்தது. ஜெர்மனியில் அச்சடிப்புத் தொழில் நடைபெறும் செய்தி காக்ஸ்டனுக்கு எட்டியது. அவர் எண்ணம் ஜெர்மனியை நாடியது!

அச்சுத் தொழிலை முதன் முதலில் கண்டுபிடித்தது யார் என்பதில் இன்னமும் கருத்து வேறுபாடுகள் இருந்தவண்ணமுள்ளது. கீழே தருவதுபோன்ற இரு கதைகள் கூறப்படுகின்றன!

"காஸ்டர் என்ற ஒரு மனிதர் கானகங்களிலேயே சுற்றித் திரிந்தார் என்றும், அவர் முதன் முதலில் மரப்பட்டைகளாலான எழுத்துக்களைச் செய்து ஒருவிதமான மரத்தின் பாலில் அதனைத் தேய்த்து, பிறகு காகிதத்தில் ஒத்திப் பதியவைத்து அந்த எழுத்துக்களைக்கொண்டு தனது குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தார் என்றும், சில காலத்திற்குப் பிறகு அவர் தகரத்தாலும் ஈயத்தாலும் எழுத்துக்களைச் செய்து அந்த முறையை விரிவுபடுத்தினார் என்றும், அது நல்ல பயன் தரவே, சில வேலையாட்களை வைத்துக்கொண்டு ஒரு அச்சகத்தை நடத்தியதாகவும், ஒருநாள் யாரும் அச்சகத்திலில்லாத நேரத்தில் "யோவான்" என்ற ஒரு வேலைக்காரன் அந்த அச்சு எழுத்துக்களை எல்லாம் களவாடிக்கொண்டு ஜெர்மனிக்கு ஓடிவிட்டதாகவும், அவன் ஜெர்மனியிலே அச்சுத் தொழிலை நிறுவியதாகவும்" ஒரு கதை சொல்லப்படுகிறது.

'கட்டன்பர்க்' என்பவன் முதன் முதலில் அச்சுப் பொறியைக்

கண்டுபிடித்தான், அவன் முதன் முதலில் அச்சியற்றிய நூல் கிருத்துவ வேத நூலாகிய "பைபிள்" தான் என்றும் கூறுகிறார்கள்" பொதுவாகக் கட்டன்பர்க்கையே உலகம் ஒப்புக்கொண்டுள்ளது! கட்டன்பர்கினுடைய பெயரும் புகழும் ஜெர்மானிய தேசமெங்கும் பரவியது. அந்தச் செய்தி காக்ஸ்டனுடைய காதுகளுக்கு எட்டியது.

1470-ம் ஆண்டு காக்ஸ்டன் அச்சடிப்புத் தொழிலைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு "கோலன்" என்னும் நகரத்திற்குச் சென்றார். அங்கே ஒரு சிறு வீட்டில் அவர் அச்சுத் தொழிலைப் பயின்றார்! சில நாட்களில் நல்லமுறையில் பயிற்சிபெற்ற காக்ஸ்டன், பிரஞ்சு மொழியிலிருந்த பேரிலக்கியமான "எவன் ஆப்டிராய்" என்ற நூலை மொழிபெயர்த்து அதனை அச்சிட்டார். அதுதான் காக்ஸ்டன் அச்சிட்ட முதல் புத்தகமாகும்.

ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் நாடு பல சுற்றி, தான் கற்ற அரிய கல்வியோடு—தொழிலோடு அவர் தனது சொந்த நாடான இங்கிலாந்திற்குத் திரும்பினார்! ஊர்திரும்புகிற நேரத்தில் அவரிடமிருந்ததெல்லாம் ஒரு சாதாரண அச்சுப் பொறியும், தான் மொழிபெயர்த்த சில நூல்களும்தான்! தன் நாடு திரும்பிய காக்ஸ்டன், தான்கற்ற அச்சுத் தொழிலை விரிவுபடுத்தினார். "சாசர்" என்ற ஆங்கிலப் பெரும் கவிஞன் எழுதிய பல அரிய நூல்களை அவர் அச்சிட்டார்! அவை ஆங்கில மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டது! ஆனால் இங்கிலாந்திலே இருந்த செல்வச் சீமான்கள் காக்ஸ்டனுடைய முயற்சிக்கு ஊக்கம் தந்திருந்தால், அன்றே அச்சு முறை மேலும் பல மடங்கு வளர்ச்சியடைந்திருக்கும். அவர்களுடைய கவனமெல்லாம் வெறும் அரசியல் துறையில் சென்றதே தவிர, காக்ஸ்டன் பக்கம் திரும்பவில்லை! பணம்படைத்தோரின் ஆதரவு கிடைக்கவில்லை என்பதற்காக அவர் தமது முயற்சியில் தளரவில்லை! தனது நேரத்தை எல்லாம் அந்த அச்சுப் பொறியிலேயே செலவிட்டார். பல்வேறு மொழிகளைக் கற்பதிலும், அந்த மொழிகளிலுள்ள மாபெரும் இலக்கியங்களையெல்லாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தலும், அச்சிடலுமே தனது வேலையாகக் கொண்டிருந்தார்!

காலம் அவரை வயோதிகப் பருவத்திற்கு இழுத்துத் தள்ளியது. தன்னுடைய கை, கால்கள் நடுங்கிக்கொண்டிருந்த நேரத்திலும் அவர் தமது அச்சகத்தில் உட்கார்ந்து கொண்டு வேலை செய்வோருக்கு உற்சாகமூட்டிக்கொண்டும், தானும் எதையாவதுசெய்து கொண்டுமே இருந்தார்!

கோடைகாலத்தில் ஓர் நாள் அவர் "வெஸ்ட்மின்ஸ்டர்" என்ற ஊரிலே உள்ள அவரது இல்லத்தில் காலமானார்!

காக்ஸ்டனுடைய மறைவுக்குப் பின் அவருடைய அச்சகத்திலே வேலை செய்துகொண்டிருந்த நான்கு தொழிலாளர்களும் மனந்தளராது காக்ஸ்டன் செய்து வந்த அந்த அச்சக வேலையைச் செய்து மேலும் பல வெற்றிகள் பெற்றனர்!

அச்சுப்பொறியின் முழுப்பயனையும் அனுபவித்துவருகின்ற இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்ற நாம் அந்தப் பெரு மேதையை என்றும் நினைவில் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் அல்லவா.

★

---

6-ம் பக்கத் தொடர்ச்சி

கடந்த நவம்பர் 12-ந்தேதி, சென்னையில்தான், இவ்வாறு பேசியிருக்கிறார்.

அவர் தி. மு. க. அல்ல! அவரது தொடர்பும் நமக்கில்லை!!

ஐந்தாண்டுகளுக்கு முன்பு, இதையே நாம் சொன்னோம், சீறினர்—சினந்தனர்.

இப்போது அவரே, இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகுதான், இந்திய அரசியல் சட்டத்தின் கதியைப்பற்றிப் பேசவேண்டும் என்கிறார்.

என்ன பொருள்? பல தரப்பட்ட பழக்கவழக்கங்கள் கொண்ட நாட்டில் ஒரு மத்யபீடம் இருத்தல் சிரமம்! அது ஜனநாயகத்தைச் சாய்க்கும்! மொழி, வட்டார உணர்ச்சிவலுக்கிறது! எனவே...! என்று இழுக்கிறார்.

சாதாரணமா இது! சந்தானம் எப்பேற்பட்டவர்? அவர் உள்ளத்திலிருந்து கிளம்புகிறது சந்தேகம்.

பத்தாண்டுகளுக்கு!!—இன்றுள்ள, இந்தியா, அப்படியேயிருக்குமா—இந்த அரசியல் சட்டம் நீடிக்குமா என்று சந்தேகம் கிளம்பியுள்ளது அவர் மனதில்.

இப்படி மத்யசர்க்காரே 'எஜமானாக' இருந்தால், வலுத்து வரும் வட்டார உணர்ச்சியின் விளைவு எங்கே கொண்டுபோய் விடும்? — என்று யோசிக்கிறார். காங்கிரசுக்குள திரியல்ல, நேருவை விரும்பாதவரல்ல, எனினும் உள்ள நிலைமை உள்ளத்தைக் கிளறுகிறது.

உரைக்கிறார்! சந்தேகக் குரல் எழுப்புகிறார்!!

ஒரே இடத்தில் அதிகாரங்கள் குவிந்துவிடுகிறது — அங்கிருந்து அகில இந்தியாவையும் ஆட்டிப் படைக்கும் கட்சியாக இருக்கிறது காங்கிரஸ்—அது அகில இந்திய கட்சியாக விளங்கினாலும், செல்வாக்குப் பெற்று வருவது, வட்டார உணர்ச்சிதான்—இந்த வட்டார உணர்ச்சி வலுத்தால்!!—என்கிறார் சந்தானம்.

அறிஞர் — உலக சரிதம் அறிந்தவர்—அதையெல்லாம்விட இந்த நாட்டுத் தியாகத் தொண்டில் மிக மிக ஈடுபட்டவர் — அவர் மனதில் இந்தச் சந்தேகமும்; ஆதிபத்யம் உருவாகிறதே எனும் அச்சமும் கிளம்பியுள்ளது.

மாற்றுக் கட்சியினருக்கு நாம் சொல்லும்போது கேலிக்குரியதாகயிருக்கலாம். அமைச்சர் சுப்ரமணியம் போன்றோர், இடி இடித்தாலும், எரிமலைகள் குமுறினாலும் 'ஏக இந்தியா'வை, விடோம் என்று எக்காளமெழுப்பலாம். ஆனால், வளரும் உணர்ச்சி வலுத்தால்! டில்லியின் ஆதிக்கம்பற்றி உணரும் 'சந்தானங்கள்' அதிகமானால்!!

பதிலை, நமது உரிமைக் குரலைக் கண்டிக்கும் உத்தமர்கள் சிந்தனைக்கேவிட்டுவிடுகிறோம்.

# பூரித்தேன்

(இளங்கோ)

—ப்டிரு—

மாலை நேரம்—மன அயர்வுடன் மாளிகையுள் ஓர் அறையில் மங்கை படுத்திருந்தாள். சிட்டுக் குருவியொன்று அவள் கண்ணில் பட்டுத் தெறித்தது. "வாளரக்கர் காவல் உண்டெனினும் சாளரத்தின் வழி வருவேன் — வானுலகம்—விரிந்த இம் மண்ணுலகம், அனைத்துலகும் பொதுவென்பேன்—ஆடிவரும் தென்றலுடன் பாடிவரும் பறவையினம் — அச்சமின்றி வாழ்ந்திடுவேன் — அச்சமின்றி வாழ்ந்திடுவேன் — குச்சு, மச்சு—கோபுரத்தின் உச்சி—குந்தாத பகுதியில்லை—இன்பத்தின் எல்லையினை எட்டிப் பிடித்திடுவேன்--துன்பத்தின் கரைகாணத் துணிவில்லை உந்தனுக்கு—பகுத்தறிவு, பண்பாடு, என்றெல்லாம் பகல்வேடம் போடுகிறாய் — எண்ணிப்பார்! வண்ணமலர் விரிக்கும் வானம் அழைக்கிறது வருகிறேன் —வணக்கம்!'' ஏளனம் செய்துவிட்டு மீளவும் வந்தவழி சென்று வானத்தில் மறைந்ததுகாண்!

மானம் பெரிது — மண்ணகம் சிறிதெனினும் மறக்குடி மகளவள். குருவியின் சொல் கேட்டுக் குமுறினாள் — மேற்றிசையில் சிதறிய செவ்வானம் அவள் சிந்தையைப் படம் பிடித்துக் காட்டிற்று. சிறிது நேரத்திற்குள் இருட்குட்டம் வீழ்ந்த இரவிபோல் மருட்குட்டம் வீழ்ந்தாள் அம்மங்கை.

அஞ்சற்க என்பதுபோல் அமுதுபொழி நிலவு அனலைக் கக்கும் முகத்தோடு ஆழியிற் குதித்து, அதை மிதித்துக் கரையேறிக் கொண்டிருந்தது. கண்டதுதான் தாமதம் — போருக்குச் சென்ற இளமகனைப்போய்க் காண்போம் என வேல்கைக்கொண்டு விரைந்து நடைபோட்டாள் அவ்வீரமாது. அவள் எதிரே வந்த அன்பு மகன் தலை வணங்கினான். 'எலியென நம்மை இகழ்ந்தவர் நடுங்கப் புலியெனச் செயல் செய்யப்புறப்படு என்றனை! போர் முகம் நோக்கினேன்; பொழுதிறங்கியும் போருக்குச் சென்ற கட்டிளங்காளை பொட்டிட்டு வரவில்லையே! யாது நேர்ந்ததோவெனக் கிலியெழுந்ததா தாயே' என்றான்.

கேட்டதுதான் தாமதம்! இளர்ந்தெழுந்தாள்! 'கிலியெழவில்லை; கிளியினந்தான் எழுந்து வந்து என்னை ஏசிற்று—பேசிற்று— எனவேதான், ஓடிவந்தேன் உருவிய வேலுடன் — நற்றாய் நாடி வந்த காரணத்தால் நம்பவில்லை வீரத்தை என வெம்புகிறாய்; குடி தழுவி நிற்கும் கோலோன் நம் வேந்தன் — அவன் அடி தழுவி நிற்கின்றதுலகு — முரசொலி கேட்டதும் மூண்டெழுந்தீர். செருக்களம் சென்றீர்! செருநரைக் கொன்றீர்! தூண்டிற் புழுப்போல் துடிக்கத் துடிக்கப் பகைப் புலத்தை வென்றீர்! வாகையும் சூடினீர்! மற்றும், மாண்டவர் போக மீண்டவர் தம்மைக் கொட்டடியில் இட்டுவிட்டு வேலுக்கு நெய்பூசும் வேடிக்கை பற்பலவும் கண்டேன்! வெற்றி பெற்று மீண்ட வீரர் தமக்கு முதல் நாள், மாளிகையின் முன்னர் மன்னர் மண்டையில் மதுரசமும் தாக்கண்டேன். மற்றவர் இருக்கக் கொற்றவன், கள்ளுண்ண உன்னை உவந்தழைத்த காட்சி என் கண்விட்டகலவில்லை. ஆயினும், அதே சமயத்துப்போரில் புரந்தார்கண்ணீர் மல்கச் சாக்காட்டை இரந்துபெற்ற வீரரையும் கண்டேன். அவரைப் பாவாடை போர்த்திப் பாடையிலே கொண்டுசெலப் பாராளும் வேந்தன் பாசத்தால் நீர் சொரிந்தான். செயற்கரிய செயலது காண்! வேறு பெறற்கரிய பேறுமிலை. அப்பேறு பெற்றிலனே அன்பு மகனென்று என்புருகி நிற்கின்றேன். எனைப்பார்த்துக் கேட்கின்றாய் எள்ளளவும் நினையாமல்! தங்கள் மகனெங்கே என்றவுடன், 'புலியிருந்த குகையன்றோ என் வயிறு! பெற்றதறிவேன்; பிறிதொன்றும் நானறியேன்' எனக் கேட்டவன் தலைகுனிய நிலையுணர்த்திய தாய் வழி வந்த என்னைப் பார்த்தா எழுந்ததிக் கேள்வி? என்றவள் பொன்றவில்லையெனப் 'புறம்' கூறப் பூரித்தேன்!

★

ஒரு குறிப்பிட்ட முறையில் ஒருவர் தவறிவிட்டால் வேறொருவர் அதில் வெற்றி பெற முடியாது என்று முடிவு செய்துவிடமுடியாது. "பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம், சாதிக்க முடியாத ஒன்று நம்மாலா ஆகப்போகிறது?'' என்று நிபுணர்கள் தயங்கியபோது, சிறிதும் பழக்கமில்லாத சில சாதாரணத் தொழிலாளர்கள் குருட்டுத்தனமாகச் செய்து வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள்.

* * *

சித்திரக்கலையில் உண்டாகும் தேர்ச்சி கைப்பழக்கத்தால் வருவது: செந்தமிழ் வன்மை நாப்பழக்கத்தால் அமைவது; சிறந்த கல்வியோ மனப்பழக்கத்தால் பெறுவது; தினமும் நடக்கும் நடை, நடக்கும் பழக்கத்தால் ஏற்படுவது. ஆனால் பிறரிடம் நட்புப் பூண்பதும் தயையும் கொடையும் பிறவியிலேயே அமைய வேண்டிய குணங்கள்.

# இங்கும்-அங்கும்!

பெரியாறு மின்சக்தி நிலையத் திட்டத்தின் முடிவு பற்றிப் பெருமையோடு பேசாதார் இல்லை எனலாம் — இங்கு! மந்திரிகளிலிருந்து — சாதாரண மக்கள்வரை அதன் பீடுபற்றிப் பேசுகிறார்கள்! நமது தமிழக மந்திரிகள் இத் திட்டத்தைக் காட்டி "இது எதனால் முடிந்தது என்கிறீர்கள்? இந்தியாவோடு சேர்ந்திருப்பதினால்தான்" என்று தங்களுக்குச் சாதகமாகப் பேசிக்கொள்கிறார்கள்!

"ஆனந்தவிகடன்" "பெரியாறு ஒரு பெருஞ்சாதனை" என்று தலையங்கம் தீட்டுகிறது. இத்திட்டத்தினால் தமிழகத்தின் பொருளாதார நிலை உயரும்" என்று அந்த ஏடு கூறுகிறது. நாடு காக்கும் 'காவலர்'களும் இதைக்கூற மறந்தது கிடையாது. மின் சக்தி குழுத்தலைவர் எஸ். கே. செட்டூர் அவர்கள் திட்டத்தின் சிறப்புப் பற்றி "இந்து" ஏட்டிலே கட்டுரை தீட்டுகிறார் — பெருமகிழ்வோடு! எல்லாத் தேசியப் பத்திரிக்கைகளுமே பெரியாறு திட்டத்தைப் பற்றிப் புகழ்ந்து எழுதியும், படங்கள் வெளியிட்டும் தங்கள் தங்களது நன்றியைத் தெரிவித்திருக்கின்றன!

எல்லோரும் புகழ்கிறார்கள். உண்மைதான்! எல்லோராலும் மதிக்கப்படத்தக்க அளவிற்கு உயர்ந்த திட்டம் அது — மறுப்பதற்கில்லை! சாதாரணத் திட்டம் அல்ல — சிறந்த திட்டம்தான்! தமிழகத்தில் இலட்சக்கணக்கிலே தான் திட்டங்கள் தீட்டப்பட்டு முடிக்கப்பட்டதாகப் பத்திரிக்கைகளில் படித்திருக்கிறோம்! ஆனால் இத்திட்டமோ பல கோடிகளை விழுங்கியிருக்கிறது!

1955, பிப்ரவரி மாதத்தில் கனம் காமராஜர் அவர்களின் "திருக்கரத்தாலே அடித்தளக்கல் நாட்டப்பட்டு, 1958, அக்டோபர், 12ம் தேதி மாலை அவராலேயே தொடங்கிவைக்கப்பட்டிருக்கிறது! கிட்டத்தட்ட 3 வருடம் 8 மாதங்கள் ஆகியிருக்கின்றன இத்திட்டம் முடிவதற்கு! இத்திட்டத்திற்கு முழுவதுமாக ஒதுக்கப்பட்ட தொகை 10 கோடியாகும். ஆனால் அடுத்த வருடத்தோடு முடிவடைய இருக்கும் இதோடுசேர்ந்த மற்ற வேலைகளையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது ஒரு கோடி மீதப்படும் என்றும் நம்பப்படுகிறதாம்! இதை முடித்ததின் மூலம் கண்ட பலன் மேற்கொண்டும் 35000 'கிலோவாட்' மின்சாரம்கிடைக்கும்.

**ச. வெ. பாண்டியன்**

இதோடு இணைந்த மற்ற இரு இயந்திரங்களின் உற்பத்தியையும் கணக்கிட்டால் சென்னைக்கு மேலும் 1,05,0000 'கிலோவாட்' மின்சக்தி கிடைக்கும்!

'ஆனந்தவிகடன்' (16—10—58) கூறியிருப்பதுபோன்று இப்பெரிய சாதனையை இவ்வளவு சிக்கனத்தோடும், திறமையோடும் முடித்துத்தந்திருக்கிற நமது பொறியியலர்களின் செயல் 'அவர்களின் திறமைக்கும், ஊக்கத்திற்கும் சிறந்த சான்றாகும்'. இதிலே வேறு கூறுவதற்கு ஒன்றும் இல்லை! நாமும் அவர்கள் திறமை கண்டு பூரிக்கிறோம் — பாராட்டுகிறோம்!

ஆனால்...!

பெரியாறு மின் திட்டத்தைக் கண்டு அகமகிழ்வும்; பெருமையும் கொண்டிருக்கிற அதே நேரத்தில் வடக்கே இருந்து—"டில்லி" பீடத்திலிருந்து வடக்கேஉள்ள திட்டம் பற்றிய செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது!

பெரும்பாடுபட்டு, உண்ணாமல், உறங்காமல் உழைத்து — பணத்தைச் சேர்த்து 400 ரூபாய்க்கு ஒரு மாட்டுவண்டி வாங்கிய குடியானவனிடம் போய், ஒருவன் "போப்பா போ! என்ன வெகுவாகப் பீத்திக்கொள்கிறாயே! பூ! 400 ரூபாய் வண்டி அவ்வளவு பிரமாதமா? இதோ பார் நானும் உன்னைப்போல் வண்டியை அல்ல, 'கார்' வாங்கியிருக்கிறேன்! உசத்தியான "கடிலாக்"கார்! விலை என்ன தெரியுமா? இருபத்து ஒன்பதினாயிரம் ரூபாய்! இருபத்து ஒன்பதினாயிரம் எங்கே! நானூறு எங்கே! பெருமைப்படுகிறாயே பெருமை" என்று கூறினால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கிறது அச்செய்தி!

"பெரியாறு திட்டம்" 1955ம் ஆண்டில் துவங்கப்பட்டதல்லவா? அதே ஆண்டிலேதான் வடக்கே அந்தத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது! பெரியாறு திட்டம்அதிக மின்சக்தியைப் பெறுவதற்காகத் துவக்கப்பட்டது. ஆனால் வடக்கே நிர்மாணிக்கப்பட்ட திட்டமோ "அதிக உருக்கு" உற்பத்தி செய்வதற்காகும்!

தமிழகத் திட்டத்தின் மூலம் கிடைக்கும்பலன்மேலும்1,05,0000 "கிலோவாட்" மின்சாரமாகும்! வடநாட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நன்மை, நல்லரக "உருக்கு" கடந்த வருடத்தில் 0·78 மில்லியன்டன்னாக இருந்தது; இப்போது உற்பத்தி பெருக்கப்பட்டு அது 1·50 மில்லியன் டன்னாகிறது; சாதாரண உருக்கின் உற்பத்தி 1·1 மில்லியன் டன்னிலிருந்து 2 மில்லியன் டன்னாகப் பெருகுகிறது!

**பெரியாறு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 10 கோடியாகும்! ஆனால் செலவழித்திருப்பதோ 9 கோடிதான்! ஆனால் வடக்கே உள்ள உருக்கு உற்பத்தித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டதும், செலவழிக்கப்பட்டதும் 133 கோடி ரூபாய்!**

*ஆச்சரியப்பட்டுவிடாதீர்கள்!!*

பெரியாறு மின் திட்டத்தில் மூன்று கட்டங்கள் உண்டு! அதாவது, 35000 கிலோவாட் உற்பத்தியாகும் பொறி இயந்திரங்கள் மூன்று அமைக்கப்படவேண்டும். இதைப்போலவே உருக்கு உற்பத்தி அதிகரிப்புத் திட்டத்திலும் பல கட்டங்கள் உண்டு! முதல் கட்டம் ஒரு மின் உலை அமைப்பதாகும்! இதற்கு மாத்திரம் ஏழு கோடி ரூபாய் ஆகியிருக்கிறது! மற்றும் 'கரியடுப்பு' 'மூலப்பொருளைப் பிரிக்கும் இயந்திரம்' 'உருக்கு காய்ச்சும் உலை' 'பூமிங் ஆலை' ஆகிய திட்டங்களும் இதோடு இணைந்தனவாகும்!

ஆட்சியாளரால் அமைக்கப்பட்டது—பெரியாறு திட்டம்! வடநாட்டு உருக்கு உற்பத்தித் திட்டமோ ஒரு தனிப்பட்ட 'கம்பெனி'யால் உண்டாக்கப்பட்டதாகும்! பெரும் இலட்சாதிபதியாம் டாட்டாவிற்குச் சொந்தமான "டாட்டா ஐயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி"யே இத்தகைய மகத்தான திட்டத்தை நிறைவேற்றியுள்ளது!

இத்திட்டத்தை நிறைவேற்ற இக் கம்பெனி, டெல்லி சர்க்காரின் உதவியை மிகவும் நாடியிருக்கிறது! டில்லி சர்க்கார் மாத்திரம் 'சர்க்கார் உருக்கு நிதி'யிலிருந்து ரூபாய் 10 கோடி கடன் வழங்கியுள்ளது. இதோடு நின்றுவிடாமல் வெளிநாட்டுப் பண உதவிக்கும், தொழில் வல்லுநர்களுக்கும் நன்றுகப் பாடுபட்டிடுக்கிறது டில்லி! அமெரிக்காவிடமிருந்து மாத்திரம் இக்கம்பெனி இத் திட்டத்திற்காக, கடனுகப்பெற்றுள்ள பணம் 61 கோடி ரூபாயாகும்! மொத்தம் 133 கோடி ரூபாயில் 75 கோடி ரூபாய் கடன் மூலம் திரட்டப்பட்டிருக்கிறது!

தினம் 600 டன் உருக்குத் தயாரித்துக் கொண்டிருந்த இக் கம்பெனி இவ்வளவு பணம் செலவழித்து முடித்துள்ள திட்டத்தின்படி இனி நாள் ஒன்றுக்கு 1500-டன் உருக்கு உற்பத்தியாக்கும்!

'பெரியாறு' திட்டத்தைப்பற்றி புளகாங்கிதமடைந்து கொண்டிருக்கும்நேரத்தில், நாம் 'உருக்குத்' திட்டத்தையும் பார்க்கவேண்டியதிருக்கிறது! வடநாட்டுத் திட்டத்தின் செலவும், வளர்ச்சியும் நம்மைப் பிரமிக்கச்செய்து விடுகிறது!

வடநாட்டுத் தனி நபர் திட்டம் அக்டோபர் 10-ம் தேதி திறந்து வைக்கப்பட்டிருக்கிறது! பெரியாறுத் திட்டமும் அக்டோபர் 12-ம் தேதியில் தொடங்கிவைக்கப்பட்டிருக்கிறது!

நாம் ஏடுகளில் 'தென்னாட்டுப் பெரிய மின்நிலையங்களில் இதுவும் ஒன்று" என்றுதான் பெரியாறு திட்டம்பற்றி எழுதியுள்ளதாகப் படித்தோம். ஆனால் வடநாட்டு உருக்குத் திட்டமோ "இந்தியாவிலேயே பெரியதும், உலகத்திலேயே மிகப் புதிய முறைப்படி அமைக்கப்பட்டதும் ஆன 'உலை, இதுதான்" என்று 'காமர்ஸ்' என்ற பம்பாய் ஏடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுக் காட்டுமளவு உயர்ந்த திட்டமாகும்!

சென்னைத் திட்டம் "சென்னைக்குப் பெரியது! வடநாட்டுத் திட்டமோ இந்தியாவிலேயே பெரிது! ஏன் ஆசியாக் கண்டத்திலேயே பெரிது! உலகத்தின் நவீன அமைப்புகளில் இதுவும் ஒன்று! இதிலிருந்தே 'சென்னை'த் திட்டத்தின் 'சிறிய அளவும்' வடநாட்டுத் திட்டத்தின் பெரிய அளவும் நன்கு புலனாகும்!

எனவே நாம் இதன்மூலம் பெறுவது, வடநாட்டில் தொழில்துறை எவ்வளவு தூரம் கொடிகட்டிப்பறக்கிறது என்பதுதான்! தென்னகத்தின் வளர்ச்சி வடநாட்டு வளர்ச்சிக்கு ஈடாகாது! வடநாட்டு வளர்ச்சி 'கடிலாக்'கார் வைத்திருப்பவர் போன்றது என்றால் நமது வளர்ச்சி வண்டிக்காரர் வளர்ச்சி போன்றதே!

9-கோடித் திட்டத்தின் முடிவால் தமிழகத்தின் பொருளாதார நிலை உயரும் என்று மந்திரி 'இராமையா' அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள். அப்படியானால் 133-கோடித் திட்டம் எத்துணை அளவு உயர்ந்த பொருளாதார நிலைக்கு வடக்கே அடிகோலும்?! காய்பவர் கணக்கிட்டுப் பார்ப்பார்களாக!

★

---

*தலைமை நிலையச் செய்தி;*

## 'நாத்திகம்'
### பற்றிய அறிவிப்பு

'நாத்திகம்' என்ற பத்திரிகை 'தி. மு. க. ஏடு' என்ற பெயரில் வெளியிடுவது குறித்தும், அதில் காணப்படும் கருத்துக்கள் குறித்தும், திகைப்பும் வருத்தமும் கலந்த முறையில் பலர், கடித மூலமும், நேரிலும் தமது எண்ணத்தை எடுத்துக் கூறியுள்ளனர்.

அந்த இதழ் தி. மு. கழகத்தால் நடத்தப்படுவது அல்ல என்பதையும், அதில் வெளிவரும் கருத்துக்களை தி. மு. கழகம் ஆதரிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

'தி. மு. க. ஏடு' என்று பெயரிட்டுக்கொள்ளக் கூடாது என அதன் ஆசிரியர் முறைப்படி எச்சரிக்கப் பட்டிருக்கிறார்.

கழகத்திற்குக் கேடு பயக்கும் வகையில் வெளிவரும் அத்தகைய இதழுக்குக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் எவ்வித ஆதரவோ, ஊக்கமோ தரவேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**—தலைமைக் கழகம் (தி. மு. க.)**

# "கானல் நீர்!"

( பொ. மறைமலை )

— பழநி —

உறையூர்!

ஒரு கோழியின் வீரச் செயலுக்காக 'கோழியகம்' எனப் பெயரிடப்பட்ட உறையூர்!

உறையூரை ஆண்ட சோழப் பெருவளத்தான்—எட்டுத்திக்கும் வெற்றி முரசு கொட்டிய திண்தோள் வீரன், அறிவும் திருவும் பெற்ற பண்பாளன்.

உறையூரில் உறையும் ஓர் மூதாட்டி. அவளுக்கு ஒரே ஒரு பெண். அழகே உருவான அணங்கு. கண்ணிமைபோலக் காத்து அவளை வளர்த்து வந்தாள் அவள் அன்னை.

"கண்ணே! இப்படி வாம்மா!..."

"என்னம்மா!..."

"உனக்குக் கல்யாணம்!..."

"போம்மா!......பத்து வயசிலே கல்யாணமா!..."

"இப்போ இல்லே! நீ பெரிய பொண்ணு ஆனதும்... உனக்கும் நம்ப இராசாவுக்கும்!..."

"போம்மா!..."

அவள் ஓடிவிட்டாள்.

காலம் மாறியது. கன்னியானாள் அவள். கட்டழகு மங்கையாக, தோற்றமும், வலிவும் பொலிவும் மிக்கஅவள் இப்படித்திகழ்ந்தாள்

"...அறல் போல் கூந்தல் பிறைபோல்
திரு நுதல்
கொலைவில் புருவத்துக் கொழுங்கடை
மழைக்கண்
இலவிதழ் புரையும் இன்மொழித்துவர் வாய்ப்
பல உறு முத்தின் பழிதீர் வெண்பல்..."

திங்கள்போல் திகழ்ந்த திருவுடைய வதனத்தின் வனப்பு, எல்லோரையும் வசீகரிக்கும் விதத்திலே விளங்கியது.

சின்னஞ்சிறு வயதிலே அன்னையவள் கூறிய "அந்த வார்த்தை" இப்போது காயாகிக் கனியாகிக் கன்னியாகி இருக்கும்—இப்போது நினைவுக்கு வந்தது. அன்று வெட்கத்திலே வேண்டாம் என்று சொன்னேம். இன்று பருவம் விட்டால்தானே!

"உன்னை நம்ப இராசாவுக்குத் தான் திருமணம் செய்யப்போகிறேன்!" ஆம். அன்று அன்னை கூறிய தேன்மொழி.

"உறையூர்க் கோமான் சோழனைக் காணவேண்டும். அவனைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும்..." இப்படி அவள் எண்ணினாள்.

ஒருநாள் சோழன் எழில்மிக்க வீதியின் வழியாக வருகிறான். வண்ணப் பொருள்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு, எழில் மிக்க காளையாக வருகிறான். அவனது எழில்மிக்க உருவந்தன்னைப் பருக எத்தனையோ ஏந்திழைகள் ஏங்கிக்கிடக்கிறார்கள். வான் கொஞ்சும் மாடியிலே—மச்சு வீடுகளிலே சிறையிருக்கும் சிங்காரப் பெண்மணிகள் ஆவலுடன் ஓடி வந்து அழகனைக் காணுகின்றனர்.

அவளும் மயிலென ஒயிலாக வந்தாள். நின்றாள்; பார்த்தாள்; அவன் சென்றான். பார்த்துக்கொண்டே நின்றாள். அன்னையும் இவள் காதல் நோக்கைப் பார்த்துக்கொண்டே நின்றாள்.

அன்று முதல் அவளுக்குத் தண்டனை! ஆம். வெறுங்காவல்! அவளுக்கோ அது கடுங்காவல்!

மணமாகாத மங்கை வேற்று ஆடவனைக் கண்டது குற்றம்! அக்குற்றத்திற்குத் தண்டனை தான் சிறைக்காவல்! வெளியே வரக்கூடாது! எதையும் பார்க்கக் கூடாது! இது அன்னையின் ஆணை.

எண்ணமெல்லாம் மண்ணாகி விட்டது; கட்டிய மனக்கோட்டை சுக்கு நூறாயின. இன்பக்கனவெல்லாம் நனவாகும் என்ற எண்ணம் அழிந்துவிட்டது. அழுதாள். அன்னையைத்தொழுதாள். என்ன செய்யமுடியும்?

"ஆசை காட்டி மோசம் செய்தாளே அன்னை!...என் எண்ணமெல்லாம் கானல் நீர்தானா? ஆம். கானல் நீர்தான்! நீரென்று நினைத்துக் கூட்டமாக ஓடிவந்து தாகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று வந்த விலங்கினங்கள், 'நீரல்ல அது, கானல் நீர்' என அறிந்தால் அதன் நிலை எப்படியிருக்குமோ அப்படி இருந்தது அவள் நிலை.

என் காதல்—கானல் நீர்!

அவள் சோகமாகக் கூறும் இம் முத்தொள்ளாயிரச் செய்யுளைக் காண்போம்.

"குதலைப் பருவத்தே
கோழிக் கோமானை
வதுவை பெறுகென்றாள்
அன்னை—அதுபோய்
விளைந்த வா இன்று
வியன் கானல் வெண்தேர்த்
துளங்கு நீர் மாமருட்டி அற்று"

★

காதலித்துத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகள் திருமணத்தை மாயா ஜாலங்கள் நிறைந்த ஒரு கற்பனை உலகத்துவாழ்க்கை போன்றது என்று எண்ணிவிடக் கூடாது. அவர்கள் வாழப் போவது விருப்பு வெறுப்புகள் நிறைந்த உண்மையான ஒரு நடைமுறை உலகம் என எண்ணினால்தான் அவர்களால் மணவாழ்வு வாழமுடியும்.

சிறுகதை

# “தபால்காரன்”

மங்கலக் காலை இனிதாக மலர்ந்தது. திரைகடல் மேலே செங்கதிர் எழுந்தான். காதலனும் கதிரவன் வருகையால், காதலியாம் தாமரையாள் குறுநகை புரிந்தாள். இசைபாடி உணவைத் தேடி, அங்குமிங்கும் பறவைகள் அலைந்துகொண்டிருந்தன. கலப்பையைத் தூக்கி மலைத்தோளின் மேல் உட்கார வைத்துக்கொண்டு, மாடுகளை விரட்டிய வண்ணம் நாட்டின் முதுகெலும்பாம் உழவர்கள், நிலத்தைப் பண்படுத்த வேகமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். அந்த நல்லவர்கள் இன்றேல் இந்தப் பொல்லாத உலகம் ஏது? கடுமையாக உழைக்கும் அந்த உழைப்பாளிகளைக் கணவராகக்கொண்ட இல்லத்தரசிகள், பம்பரம்போல் வீட்டு வேலைகளை உற்சாகமாய்ச் செய்யலாயினர். அத்தானுக்கு நண்பகல் உணவை, அந்த மூங்கில் கூடையில் கட்டழகு பொம்மைகள் கொண்டுபோக வேண்டுமல்லவா?

அந்த அழகான சிற்றூர் அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. செயற்கை அழகு நிறைந்த பட்டணத்தைவிட, இயற்கை எழில் கொஞ்சும் சிற்றூர், அவன் மனத்திற்கு அமைதியையும் இன்பத்தையும் அளித்தது. சாளரத்தின் அருகில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "திருக்குறளை" அவன் புரட்டிக் கொண்டிருந்தான். நல் அமுதாம் தமிழ்மீதில் அவனுக்கு உயிர். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ் அல்லவா! முடியுடை மூவேந்தர் ஆண்ட நாட்டில் பிறந்தவன் அல்லவா?

பொற்புடைய அவன் தங்கை முல்லை, அன்புடன் சிரித்துக் கொண்டே வந்து, காபியைக் கொடுத்துவிட்டுச் சென்றாள். சுவையாக இருந்த அந்தக் காபியை மெதுவாகக் குடித்துக் கொண்டே, தெருப் பக்கமாக அவன் கண்களை மேயவிட்டுக் கொண்டிருந்தான். காலைக் காட்சி அவன் கண்களுக்கு ஒரு நல்ல விருந்தாக இருந்தது. திரும்பவும் கையில் புத்தகத்தை எடுத்துக் கொண்டான். காலை இளம் பகலவனின் தங்க ஒளி, சன்னலுக்குள் சுதந்திரமாக வந்து விளையாடிக் கொண்டிருந்தது.

வி. ஆர். துரை

"அண்ணா! ஆராய்ச்சி இன்னும் முடியலியா?"

"முல்லை......! நல்ல நேரத்தில் தொல்லை!"

"ஆராய்ச்சிக் கடலிலிருந்து பேசுகிறீர்களா அண்ணா' அப்படியென்றால், அஞ்சல் கொடுக்கின்ற இந்த வேலைக்கு ஏன் வந்தீர்கள்?"

"பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல். அப்படி நான் சொல்லவில்லை தங்கச்சி; அதிவீரராம பாண்டியர் சொல்லுகிறார்."

"அப்படிச் சொல்லித்தானே பெண்களை ஊமையாக்கிவிட்டார்கள். அடடே! வலது கையில் கடிகாரம் ஏறிக்கொண்டிருக்கிறதே...!"

"ஏன் முல்லை, இடது கையில் தான் கட்ட வேண்டுமென்று, எந்தச் சட்டப் புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறது?"

"போதும். உங்கள் விளக்கம். போய்ப் பாருங்கள் வேலையை. அஞ்சல் பைகூட இரயிலடியிலிருந்து வந்துவிட்டது."

அவசர அவசரமாக அவன் நடந்துகொண்டிருந்தான். பலாப் பழத்தை ஈ மொய்ப்பதுபோல், அஞ்சல் நிலையத்தை மக்கள் கூட்டம் மொய்த்துக்கொண்டிருந்தது. அங்கிருந்தவர்களை ஒருவாறு சமாளித்துவிட்டு, வந்திருந்த ஒரு சில மணியார்டர்களையும் தூக்கிக் கொண்டு, சுறுசுறுப்பாக அவன் புறப்பட்டான்.

ஒரு பெரிய மெத்தை வீடு. அந்த வீட்டின் வழவழப்பான திண்ணையில், கால்களைத் தொங்க போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த கிழவி, அவனைக் கண்டதும் எழுந்து நின்றாள். "பாவம், பழங்காலம்! மரியாதை போலும் நமக்கு!" அவன் கற்பனை செய்து கொண்டான். சிப்பாயில் சேர்ந்துவிட்டிருந்த பேரனிடமிருந்து, தன் பெயருக்கு வந்திருக்கும் கடிதத்தை வாங்கிக் கொள்ளத்தான், ஆர்வத்துடன் அவள் காத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு பேரப்பிள்ளையின் மேல் அத்துணை ஆசை. இந்த உண்மை அப்போது அவனுக்கு தெரியாது. பின்னால்தான் அந்தக் கதை புரிந்தது.

அவளைக் கண்டும் கவனியாமல் மேலே அவன் நடந்துகொண்டிருந்தான். அது அவன் குற்றம் அல்ல! அந்த ஊருக்கு அவன் புதியவன். ஒன்றிரண்டு நாட்களே முடிந்திருந்தன. ஊரின் முழு விவரம் அவனுக்கு எப்படித் தெரிய

முடியும்? அந்தப் பாட்டிக்கு அவன் மேல் அளவு கடந்த ஆத்திரம் வந்துவிட்டது. அதற்குப் பிறகு நடந்த சோக வரலாறு இது.

"யோ...டபாலு! எங்கே தபாலு? நீக்கிறதுகண்தெரியலியா? எங்கே உம்பாட்ல ஓடறே!"

"ஏ. பாட்டி! உனக்கு வயசுதான் அதிகமாக ஆய்விட்டிருக்கிறது. மரியாதையாகப் பேசத் தெரியவில்லை இனிமேலாவது கற்றுக்கொள்!"

கிழவி எழுப்பிய கூச்சலுக்குப் பதிலாக அவன் முழங்கிவிட்டான். அவள் அளவுகடந்த ஆத்திரத்தோடு வாயால் வாழ்த்தினாள்; அவனை அடிக்க முகத்தருகே கையையும் கொண்டுவந்துவிட்டாள். ஒரு சிறு கூட்டமே அங்கு வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டது. எல்லோருடைய வாயும் அவனைத் திட்டித்தீர்த்தன. குனிந்திருந்த அவன் முகத்தில் அசடு ஆறுய் வழிந்துகொண்டிருந்தது. அந்தக் கண்கொள்ளாக் காட்சி கிழவியின் இரு கண்களுக்கு விருந்தாக இருந்தது. அவனால் தலைநிமிர்ந்து பார்க்கமுடியவில்லை. அது எப்படி முடியும்? சூழ்ந்துகொண்டிருந்த ஆண்களைப்பற்றிக்கூட அவன் கவலைப்படவில்லை. சன்னலுக்குள் புது ரோஜாமலர் போன்ற, மங்கையொருத்தி நின்று இரசித்துக் கொண்டிருந்தாள். அங்கிருந்து பருவமங்கைபோல் தலை கவிழ்ந்து நடந்தான். இந்த வேலையைவிட்டு விடலாம் என்று கூட அவன் எண்ணிவிட்டான். அந்த உத்தியோகத்தை எட்டிப்பிடிக்கவே, அவன் 'பெரிய மனிதர்கள்' என்பவர்களுக்குக் கொடுத்த 'கிம்பளம்' நினைவிற்கு வந்ததும், ராஜினமா எண்ணத்தை இழந்துவிட்டான்.

அங்கு கண்ட சன்னல் அழகியைப்பற்றி, அவன் தப்புக்கணக்குப் போட்டுவிட்டான். அவள் அந்தக் கிழவியின்மீது ஆத்திரமும், அவன் மீது அனுதாபமும் அடைந்தாள். இந்தச் சுவையான சேதி அவன் செவியில் விழுந்தபோது, பொங்கிவிட்டது உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம். பூரித்துப் விட்டான்.

கதிரவன் உச்சிக்குவந்து நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தான், வியர்வைக் குளத்தில் நீச்சலடித்துக் கொண்டிருந்த அவன், வீட்டிற்குள் காலெடுத்து வைத்தான். அந்தச் சோகம் இன்னும் அவன் முகத்தில் உறவாடிக்கொண்டுதான் இருந்தது.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்."

அவனுக்குச் சுருக்கென்று முள் தைத்தது போலாகியது. அதற்குள் யார் மூட்டைகட்டிக்கொண்டு வந்து, தங்கையிடம் சொல்லிவிட்டார்கள்? அவன் தலைநிமிர்ந்து பார்த்தான். ஊஞ்சலில் அவன் தங்கை. பக்கத்தில் ஒரு தங்கச் சிலை. கண்டவர் உயிர் உண்ணும் அந்தப் புதிய காரிகை யார்? அங்கவன் பார்த்த அதே பூங்கொடி; இங்கெதற்கு வந்தாளோ?

அவனைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து, சிலைபோல் நின்றாள். தேன்மலர்ச் சோலையில் கொழு கொம்பைபக்கட்டி அணைத்து முத்தமிட்டுக் கொண்டிருக்கும் முல்லைக் கொடிபோல், வளை கரத்தால் தூணைத் தழுவிக்கொண்டு, சில விநாடிகளே வரிவிழியாள் ஒயிலாக நின்றிருந்தாள். நாணத்தால்

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

வழைத்து, அவர்களுக்கு உதவியாக பல இந்தியத் தொழிலாளரை அமர்த்தி, இன்னும் குறைந்த செலவில் அவ்வேலையை நடத்துவது சாத்தியமில்லையா?

சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்கென ஏராளமான ஊதியத்தின்பேரில் வரவழைக்கப்பட்ட அந்நிய நிபுணர்கள் உண்மையில் நமக்குத் தேவையான விஷயங்களில் ஆலோசனை கூற அருகதையற்றவர்கள். மேலும் அவர்களில் பலர் நமக்குத் தளவாடங்கள் சப்ளை செய்யும் அந்நியக் கம்பெனிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நமக்குத் தக்க ஆலோசனை கூறவேண்டுமென்பதைவிட அக்கம்பெனியின் தளவாடங்களை நமது தலையில் கட்டுவதிலேயே அவர்கள் அதிக அக்கரை காட்டி வந்திருப்பாராயின், அதில் சிறிதும் ஆச்சரியத்துக்கிடமில்லை. இத்தொழிற்சாலைகள் சம்பந்தமாக அமர்த்தப்பட்டுள்ள அந்நிய எஞ்சினீயர்கள் தங்கள்வேலையில் இந்தியருக்குப் பயிற்சி அளிக்கவும் தக்க ஏற்பாடு செய்யப்படவில்லை. மேலும் ஏற்கனவே மேற்கொண்ட வேலையைச் சரியாகச் செய்யாததற்காகச் சர்க்காரால் கண்டிக்கப்பட்ட சில காண்டிராக்டர்களிடமே இந்த உருக்குத் தொழிற்சாலைகள் வேலைகள் சம்பந்தமான அதிகாரிகள் ஒப்படைத்திருப்பதற்கு என்ன சமாதானம் கூற முடியும்? இத்தொழிற்சாலைகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பல தளவாடங்களில் ஒரு கணிசமான பகுதி போதிய கண்காணிப்பு இல்லாதது காரணமாகத் திருட்டுப் போவது பற்றியும் ஸ்ரீ என். ஜி. ரங்கா குறிப்பிட்டுள்ளார். லோக்சபை விவாதத்தின் பலனாக மேற்குறித்த ஊழல்கள் எப்போது, எந்த அளவு மறைந்தொழியும் என்று நாம் திட்டமாகச் சொல்வதற்கில்லை."

நாம் உண்மையைக் கூறும்போது உறுமுவோர் இதை ஒருமுறைக்கு இருமுறை படித்துப்பார்த்துத் தெளிவு பெறட்டும் என்பதற்காகவே இதனை எழுதினோம். காய்வோர் காயட்டும்—காலம் அவர்களுக்குக் கண் திறக்கும் என்ற நம்பிக்கையோடு நாம் கடமையை—மக்களின் நன்மை ஒன்றையே குறிக்கோளாகவைத்துச் செய்துவருகிறோம்.

சர்க்காரின் கண்மூடித்தனமான செயல்களை அவ்வப்போது எடுத்துக்காட்டி மக்களை விழிப்படையச் செய்யும் நம்மை ஏசுவோர் ஏராளம் உண்டு என்பதை நாம் அறிவோம். அதற்காக நாட்டின் நலம் காக்கும் பணியில் இருந்து விலகிவிடமுடியுமா? என்றைக்காவது ஒருநாள் நாம் கூறும் குற்றச்சாட்டுகள் எல்லாம் மக்கள் மத்தியில் ஒப்புக்கொள்ளப்பட்டே தீரும் என்ற நம்பிக்கை மட்டும் நமக்குண்டு.

★

அவள் முகத்தாமரை நிலம் நோக்கிக் கவிழ்ந்தது. கவிதை செய்யத் தெரியாதவன்கூடக் கவிஞன் ஆகிவிடுவான். வானத்துத் தாரகை வையகத்து மண்ணிற்கு ஏன் வந்தது? சிங்காரச் சிட்டுப் போல், தீராத நோயைப் பார்வையால் தந்துவிட்டு, பட்டு மேனியாள் பறந்துவிட்டாள். அவள் தந்த நோய்க்கு அவளிடமே மருந்து இருப்பதை, அவன் கண்டுகொண்டான். அந்த அன்னம் மேகத்து மின்னலென மறைந்தும், அசையாத பதுமைபோல் ஓரிடத்திலே நின்றிருந்தான்.

"வாடாமலர் மேனி. வட்ட மதி முகம். வண்டுவிழிகள். வாளோடும் மின்னல் இடை. கொத்து முல்லை கூந்தலில். முத்துப் பற்கள். தென்றல் நடை. அரம்பையாம் ஊர்வசியாம்—பேரழகிகளாம் அவர்கள். பக்த சிகாமணிகள் கதை கதையாகச் சொல்லுகிறார்கள். அழகின் இலக்கணமாகத் திகழும் இவளுடைய கால்தூசுக்கு ஈடாகச் சொல்ல முடியுமா? ஆயிரம் நிலவு இவளெதிரே என் செய்யும்? ஒரு அழகான பெண்" அவன் வாய் திறந்தே பேசிவிட்டான்.

"ஒரு பெண்ணை அதற்குள்ளாகவா எடை போட்டுவிட்டீர்கள்?"

பழைய நிலைக்கு அவன் திரும்பி வந்து, சூழ்நிலை உணர்ந்து அறைக்குள் நுழைந்து, சிரித்த வண்ணமே உட்கார்ந்தான். தொடர்ந்து அவன் அழகு தங்கையின் கிண்டலும் வந்து சேர்ந்தது.

"பொங்கு கடல் ஆழத்தையும் எளிதாகக் கண்டுகொள்ளலாம். பூவைமார் உள்ளத்தைக் காண்டல் முயற்கொம்பேயாம். நினைத்தபடியெல்லாம் எழுத்தாளர்கள் தேனாக வருணித்து, பெண்ணினத்திற்குப் பெருமை தேடித் தந்துவிட்டார்கள். நான் மட்டும் ஓர் எழுத்தாளனாக இருந்தால் ......? முனிபுங்கவர் வேடம் கலைந்ததா?"

முல்லை பிரசங்கத்தை முடித்தாள். ஒரு பெருமூச்சுவிட்டு அண்ணன் பீரோவைத் திறந்தான். இரண்டு பெரிய மாங்கனி. ஒரு அழகான கைக்குட்டையில், முடி போட்டு வைக்கப்பட்டிருந்தது. அதை அவிழ்த்தால் அதனுள்ளே ஒரு கடிதம்! அவன் ஆச்சரியப்பட்டான். அண்ணனின் நிலையையே முல்லையும் அடைந்தாள்.

அன்புள்ள அரசே!

நான் உங்கள் சொத்து' என்னைப் பேரழகால் வென்று அடிமையாக்கி விட்டீர்கள். ஒரே விநாடியில் என் இதயத்தைத் திருடிக்கொண்டீர்கள். மாசற்ற உங்களின் இதய சிம்மாசனத்தில் எனக்கொரு இடம் கிடைக்காதா?

காலையில் என் பாட்டி, தவறாகக் கோபித்துக்கொண்டு அவமானப்படுத்தி விட்டாள். கண்டிக்கத் தவறவில்லை நான். அவளே அதற்காக மிகவும் வருந்தினாள். திருப்பதி வெங்கடாஜலபதியைக் கண்டு பேசிவர, தாயும் தந்தையும் சென்றிருக்கிறார்கள். எனக்குள்ள ஒரே அண்ணன் மலையமான், கோபித்துக் கொண்டுபோய் சிப்பாயில் சேர்ந்துவிட்டார். சண்டை நின்றுவிடும் சூழ்நிலையில் உள்ளதாம். ஒரு சில தினங்களில் வருவதாகக் கடிதம் எழுதி இருக்கிறார். நக்கீரன் என்னும் பெயர்கொண்ட தம்பி, நான்காம் வகுப்பில் வாசிக்கிறான்.

வீட்டில் எனக்குத் துணையாக, பாட்டி மட்டுமே இருக்கிறாள். நாளை மயக்கும் மாலைப் பொழுதில், அவசியம் நீங்கள் வருகை தரவேண்டும். எதற்கும் நீங்கள் அஞ்ச வேண்டாம். ஆவலுடன காத்திருப்பேன். பேசவும் பேரழகை இரசிக்கவும் ஆவல். என் ஆசையில் மண்ணைப்போட்டு விடாதீர்கள். ஏமாற்றத்தை மறந்தும் பரிசாக எனக்களிக்க எண்ணாதீர்கள். வாடி விடுவேன்.

அன்புள்ள,
உங்கள் கலாவல்லி

"அழகான முத்தெழுத்து! அச்செழுத்து என் செய்யும்!" கடிதத்திற்குச் சொந்தக்காரன் வாய் திறந்தான். அதைத் தொடர்ந்து முல்லை பேசினாள்.

"சரியான கள்ளி! எனக்குத் தெரியாமலேயே வைத்துவிட்டு சாமர்த்தியமாகப் போயிருக்கிறாள். அப்படியில்லாமலா ஒரே நொடியில் என் அண்ணனைத் திருடிக்கொண்டாள். அறைக்குள் நுழையும் போதே நான் சந்தேகப்பட்டேன்!"

அவன் சிரித்தேவிட்டான். கடிதத்தில் அவனைக் கட்டாயம் வரச் சொல்லி, கட்டழகி வேண்டியிருக்கிறாள். கரும்பு தின்னக் கூலியா?

அரை நொடியில் கடைக்கண்ணைக் காட்டாமல் காட்டிப்பேசி, அவனைப் பாழ்படுத்திவிட்டாள். அசைக்கமுடியாத அவன் உறுதியை தூள்தூளாக்கிவிட்டாள். இல்லாதிருந்த நோய்க்கு அவனைச் சொந்தக்காரனாக்கிவிட்டு, மின்னலென மறைந்துவிட்டாள். அவள் மிகவும் கெட்டிக்காரி, அப்படியில்லாமலா அவனை ஒரே நொடியில் விலைக்கு வாங்கிவிட்டாள். ஏன்? பெண்களே மிகவும் கெட்டிக்காரிகள் தான். "மயக்கும் உன் அழகிற்கு நான் அடிமை அல்லன்' அந்தோனி இப்படித்தான் எக்காளமிட்டான். ஆனாலும் அவன் வென்றான் இல்லை. அழகி கிளியோபாட்ராதான் வெற்றிகொண்டாள். எல்லாம் மறந்து அவள் மடியே இன்பபுரியாகக் கொண்டான். அழகின் கதை அப்படியிருக்க, அரும்பு மீசை வாலிபனான இவன் எம்மாத்திரம்? ஒரு மாங்கனியை ஆசையோடு எடுத்து, வாயில் வைத்துக் கடித்தான். அவளின் கரம் பட்டதால், எவ்வளவு சுவை!

அந்த மயக்கும் மாலை வந்தது. பெண்ணின் இதழ்போல் வானம் சிவந்திருந்தது. மனதைக் கவர்ந்த மங்கையர்க்கரசியின் இல்லம் நோக்கி, இன்பமாக அவன் நடந்து கொண்டிருந்தான். ஆசை எண்ணங்கள் பல அலைமோத, வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தான்.

"தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா;
அமிழ்தில் இனியதடி பாப்பா—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா"

தேன் குரலால் நக்கீரன் வாசித்துக் கொண்டிருந்தான். தட்டில் பால்சோறு தம்பிக்காக, அவனுக்

## பிறப்பு

'திராவிடநாடு' அலுவலக அச்சுப் பொறி இயக்குனர் தோழர் மாணிக்கத்திற்கு 6—11—58-ல் ஓர் ஆண் குழந்தை பிறந்து நலமே உள்ளது.

க்ரசை மூட்டிவிட்டவள் பிசைந்து கொண்டிருந்தாள். தரையிலடித்த பந்தைப்போல் அவனைக் கண்டதும், துள்ளியெழுந்து தலைகுனிந்து நின்றாள். அழகை இரசிக்கவும் ஆசையோடு பேசவும் அழைத்தவள், அருகே அவனைக் கண்டதும் மானென மிரள்கிறாள். ஆசை இருந்தும் பேச நா அசையவில்லை. எழுத்தில் இருந்த வேகம் செயலில் காணோம்! அவள் பேசவே இல்லை! அந்த விரதத்தையே அவனும் மேற்கொண்டான். அமைதி அவர்களுக்கிடையே அரசோச்சிக்கொண்டிருந்தது. சங்கடமான ஒரு சூழ்நிலை. நல்ல வேளையாகத் தட்டில் தேங்காய் பழத்துடன், ஒரு கிண்ணத்தில் எண்ணெயோடு கிழவி வந்து சேர்ந்தாள்.

"வா,தம்பி! தெரியாம கோவிச்சிகிட்டேன். மனசில் ஒன்னும் வித்தியாசமா வச்சுக்காதே. நம்ம ஜாதின்னு கலாவல்லி வந்து சொன்னாள். நிறையச் சந்தோஷப் பட்டேன். ஆமா, நாமம் போடறதில்லையா?"

"யாருக்கும் எப்போதும் நான் நாமம் போட்டுப் பழக்கமில்லீங்களே!"

"பல வருஷமா வியாபாரம் செய்தும், இலாபம்கண்ணுக்குத்தெரியலியாம்! எல்லோரும் திருப்பதிக்குப் போயிருக்காங்க! மொட்டையடிச்சுத் திரும்பிவர, இன்னும் மூன்று நான்குநாட்கள் செல்லும்"

"பணக்கார வெங்கடாஜலபதியை நாடித்தான் ஓடியிருக்காங்க! பலன் கிடைச்சாலும் கிடைக்கும்."

"நல்லா பேசற, போ தம்பி. பேசிகிட்டே கோயில் வரையில போயி கும்பிட்டுவரலாம் வாயேன். இன்னிக்கு வெள்ளிக்கிழமை."

"அதெல்லாம் எனக்குப் பழக்கமில்ல பாட்டி! மேலும் எதைப் போய் கடவுளென்று வணங்குவது? உண்ணுவதும் உறங்குவதுமாக இருக்கின்ற தமிழர்கள், இந்தக் கடவுள் சம்பந்தப்பட்ட வரையில் எத்துணை சுறுசுறுப்பாக இருக்கின்றார்கள். கடன் வாங்கியாவது கடவுளுக்கு விழா கொண்டாடிவிட்டு, கையிரண்டையும் தலைமேல் வைத்துக்கொள்ளுகிறார்கள்."

"இங்கேயே கலாவல்லிக்குத் துணையாகக் கொஞ்ச நேரம் இரு தம்பி. நான் சீக்கிரம் திரும்பிடுவேன்."

திராட்சைத் தோட்டத்திற்கு நரி காவலா? 'நானும் வருகிறேன்' என்று நக்கீரன் பாட்டியைத் தொடர்ந்துவிட்டான். ஒட்டிக் கொண்டிருந்த தொந்தரவும் கழிந்தது. பழத்தோட்டம் பக்கத்தில் —பசிகாரனும் அருகிலேயே இருக்கிறான். பொம்மையாக எவ்வளவு நேரம் இருக்க முடியும்? "கசக்குமா இல்லை இனிக்குமா" என்ற பாட்டு அவன் காதில் விழுந்துகொண்டிருந்தது. மலர்க்கையாலே காபியை எடுத்து வந்தாள். அன்னந்தானே அவள். ஒருவேளை, அன்னந்தான் அவளிடம் நடை பயின்றதா?' அவன் கற்பனை உலகத்தில் மிதந்தான்.

"இந்தாங்க காபி சாப்பிடுங்கள் நானாகப் போட்டது."

"அப்படியென்றால் எனக்குச் சுவையாகத்தான் இருக்கும். இதற்குள் காபி போட்டாகிவிட்டதா? மிகவும் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டேன்."

"பேச்சுப் பின்னால்! முதலில் குடியுங்கள்."

"உம்...நீ முதலில்!"

"போதும் உங்கள் குழந்தைப் பிடிவாதம்! வம்பளக்காமல் சாப்பிடுங்கள். ஏன் அப்படியும் இப்படியும் விழிகள் அலைகின்றன. இவ்வளவு சீக்கிரத்தில் பாட்டி திரும்பிவிட மாட்டார்கள். அப்படி வந்துவிட்டாலும் வெளியிலிருந்தே குரல் கொடுப்பார்கள். காலை அலம்பிக்கொண்டுதான் வீட்டிற்குள் நுழைவார்கள். மேலும் அவர்களுக்குக் காது சரிசரியாகக் கேட்காது."

"சரியான பழங்காலம் உங்கள் பாட்டி. எல்லாம் கொடுத்த 'ஆண்டவன்' ஏனோ காதைக் கொடுக்க மறந்தான்!"

"தங்களின் பெயரை நான் தெரிந்துகொள்ளக்கூடாதா?"

"தொண்டைமான் என்று அழைக்கிறார்கள். ஒரு தமிழாசிரியர் வைத்த பெயராம் அ... வேறு யாராவது பெயர் சூ... யிருந்தால், முருகன், விநாயக... என்று டசன் கணக்கிலே இரு... கிற எந்தக் கடவுள் பெய... யாவது வைத்துவிட்டிருப்பா... கள். நல்ல வேளையாக எ... பெயர் தப்பியது."

"நகைச்சுவையாகப் பேசுகிறீ... கள். காதில் தேன் பாய்வ... போல் இருக்கிறது. எங்குதா... கற்றீரோ?"

"அழகே! எனக்கும் அப்படி... தான் தேன் மழை! தித்திக்கு... வெல்லம்!"

"அரசே! தொடர்ந்து நிறுத்தா... மல் பேசிக்கொண்டே இருங்கள்."

"இந்த இரண்டு கண்கள் போதாது. உங்கள் பூரண அழகையும்என்னால் இரசிக்கமுடியவில்லை. தேவேந்திரனுக்கு உடம்பெங்கும் கண்களாம்! ஒரு கண் எனக்கு கடனாகத் தந்தால் என்ன முழுகிப் போய்விடும்?"

அவள் சாய்ந்துவிட்டாள். அவன் இந்த உலகத்தை மறந்துவிட்டான். பின்னே யானை வந்தால் முன்னே மணியோசை வரும் என்பதுபோல், நக்கீரன் வந்து சேர்ந்தான். நல்ல பாட்டியும் வந்தாள். இதற்குமேல் அவனுக்கென்ன அங்கே வேலை!

"அடிக்கடி வந்துபோ தம்பி. உன் சொந்த வீடுமாதிரி."

'இதற்குமேல் அடிக்கடி வராமல் இருக்க முடியுமா? நமக்குள் இவ்வளவு வளர்ந்துவிட்டபிறகு!'

( அடுத்த இதழில் முடியும் )


# பொங்கல் வாழ்த்துக்கள்

கண்ணைக் கவரும்
வண்ண வாழ்த்துக்கள்
தயார்.

மாதிரிக்கு 75-புதிய காசு மணியார்டர் செய்யவும்.

முத்துப் பதிப்பகம்
1759, கிருஷ்ணன் கோவில்
மூன்றும் தெரு,
தஞ்சாவூர்.